தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

**KUDI ARASU.**

Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| உள்நாட்டு சந்தா ஒரு வருஷம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1–12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஸ்ரீ மார்கழி ௴ 23௳ (6—1—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 37.

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ. 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசாயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றாடம் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.
24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், அனுபான அநுபானம் முதலியவைகளும்; குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்.

1. பர்மாவிற்கு:— மு. ச, வடிவேல பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர் & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

**தண்டபாணி வைத்தியசாலை,**
292, சைனாபஜார், மதராஸ்

## திருப்பூர் பனியன்ஸ்.

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0
வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆத்தி: கேடலாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0.நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாய்பு,
வெட்சர்சி தோட்டம், சேலம்.

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. நிஜங்கள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி.
புதுச்சேரி.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

தி தாரன் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்
மைலாப்பூர், மதராஸ்

# திரு. பனகால் அரசருக்கு அநுதாபங்கள்.

## லாலுகுடி.

லாலுகுடி நகரவாசிகளின் சார்பாகவும் சுயமரியாதைச் சங்கத்தின் சார்பாகவும் 19—12—28 புதன்கிழமை மாலை 5-மணிக்கு சிவன்கோவில் முன்பாக ஒருபெருங்கூட்டம் கூட்டப்பட்டது.

வக்கீல் சோமசுந்தரம்பிள்ளை பி.எ, பி.எல், அவர்கள் தலைமைவகித்தார். அரசர் தம் வரலாறுகளை திரு. செல்வக் கணபதியார் அவர்கள் விவரித்துக் கூறினர். பின்னர் திரு. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் "அரசரவர்களின் பிரிவாற்றாமைக்கு இந்நகரவாசிகளாகிய நாம் ஆற்றொணாத்துயரமடைவதோடு அவர்பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கும் இக்கூட்டத்தின் சார்பாக அடங்கமுடியாத அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்" என்ற தீர்மானத்தை பிரரேபிக்க அது ஏகமனதாக நிறைவேறப்பட்டது.

இறுதியாக தலைவர் முடிவுரை நிகழ்த்திய பின் தலைவர் பிரிவுற் பதினாறுநாள் முடிவில் பல ஏழை மக்களுக்கு உணவளிக்க வேண்டுமென்று பிரேரேபித்தார், அதுவும்பல சனவான்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் கூட்டம் கலைந்தது.

யூனியன் போர்டு சார்பாகவும் தாலூகா போர்டு சார்பாகவும் அரசரின் பிரிவால் வருந்துவதாக அவர்தம் குடும்பத்தாருக்கு அனுதாபத் தீர்மானத்தை தெரிவித்துக் கொண்டார்கள். தாலூகா போர்டு பாடசாலைகளனைத்தும் அரசர் பிரிவாற்றாமைக்காக ஒருநாள் விடுமுறை விடவும் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

பொன்னம்பலனார்.

## இராசீபுரம்

### பனகால் அரசர் ஞாபகார்த்த சங்கம்

பனகால் அரசரின் தினமாகிய 26-12-28ல், தேவாங்க வாலிபர்களின் பெரும் முயற்சியால், மாலை 7-மணிக்கு சென்றாய செட்டித்தெரு சவுண்டம்மன் கோவில் முன் ஒரு பெருங்கூட்டம் கூட்டப்பட்டது.

பண்டிதர் மே. மு. மாரப்ப ஆசாரியாரவர்கள் கூட்டத்திற்கு தலைமைவகித்தார். பானகல் அரசரின் மரணத்தைக்குறித்து, பிரசங்கங்கள் செய்யப்பட்டன. பிறகு "தென்னிந்தியாவில் மிகவும் மதிப்புவாய்ந்த ஜஸ்டிஸ் கக்ஷியின் மாபெருந்தலைவரும், இணையில்லா ராஜதந்திர நிபுணரும், முடிசூடா மன்னரும், பானகல் அரசரும் ஆகிய சர். இராமராய நிங்கவாரு எம். ஏ, எம். எல். ஸி. அவர்களின் மரணத்தினால் பொதுவாய் நாடு முழுவதற்கும், சிறப்பாக பார்ப்பனரல்லாதார்க்கும், துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டுள்ள ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டத்தைக் குறித்து இக்கூட்டம் மிக வருந்துவதுடன் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அப்பெரியாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறது" என்றதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இரண்டாவதாக பனகால் அரசரின் ஞாபகார்த்தமாக ஓர்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மேற்படி "பனகால் ஞாபகார்த்த சங்க"த்தில் அங்கத்தினர்களாகச்சேர அப்பொழுதே அவ்விடத்திலேயே சுமார் 30 பேர்கள் தாங்களாகவே முன்வந்து ஊக்கத்துடன் கையெழுத்திட்டதானது மிகவும் குறிப்பிடத்தக்கது. கடைசியில் தலைவர் அவர்களின் பின்னுரை முடிந்தவுடன், கூட்டம் முடிவுபெற்றது.

அ. சித்தய்யசெட்டி.

## கரூர்

நாளது 14—12—28-தேதி கரூர் மேட்டுத்தெருவில் முனிசிபல்கவுன்சிலர் ஸ்ரீமான் ஈ. எம். கிருஷ்ணசாமி அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மருத்துவகுல சங்கத்தாரின் கூட்டம் ஒன்று இரவு 7-மணிக்குக் கூடியது அதுசமயம் கீழ்குறித்த தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

"பார்ப்பனரல்லாதாரின் மாபெருந்தலைவர் பனகால் அரசர் பூதவுடம்பை நீத்து புகழுடம்பைப்பெற்றார் எனக்கேட்டுத் திடுக்கிட்டோம். நம் தமிழ்நாட்டிற்கு அவர் மரணம் பெரும் துக்ககரமான நஷ்டமாகும்," பானகல் அரசர் திடீரென இறந்தமை குறித்து அளவிலா துக்கப்படுவதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவரது ஆன்மா சாந்தியடையுமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

எஸ். மாணிக்க மருத்துவன்.

## பார்ப்பனர் நீங்கிய சுயமரியாதை கும்பாபிடேக வைபவம்.

இம்மலேயா நாட்டில் மலாக்காவுக்கு சமீபத்திலுள்ள தம்பின் என்ற ஊரில் நமது இந்து சகோதர சகோதரிகள் வந்தனை வழிபாட்டிற்காக ஆலயம் ஒன்று இவ்வளவு காலபரியந்தம் இல்லாதிருந்ததை முன்னிட்டு சில கனவான்கள் முயற்சியால ஆலயம் கட்டப்பட்ட போதிலும், தற்காலம் நமது இந்துக்கள் இருக்கும் நிலைமைக்கு ஆலயம் வேண்டுவது அவசியமில்லை எனவும தற்போது நாம் கைக்கொண்டு பணியாற்றவேண்டியது சமூகசீர்திருத்தமேயென்றும் சிலகனவான்கள் எவ்வளவோமுயற்சித்தும் சில கனவான்கள் விருப்பிற்கிணங்க நேர்ந்ததால் ஆலயப் பணியையும் மேற்கொண்டு பூர்த்தி செய்து விபவ வருஷம் கார்த்திகைத்திங்கள் 13ந்தேதி (28-11-28) புதன்கிழமை தினம் தம்பன் பேங்கர் வி. எஸ். வி. சடகோப நாயுடுகார் நன்முயற்சியால் பார்ப்பனர் நீங்கிய கும்பாபிடேகம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. இம்மலேயா நாட்டிற்கே முதன்மையாகவும் இது ஓர் வழிகாட்டியாகவும்சொல்லலாம். மேற்படி வைபவத்திற்கு எஸ், டி, கே, சோலையப்ப செட்டியார், கே, ஆர், எல், ., லெட்சுமணன் செட்டியார், ஏ, என். ராஜா, எஸ், எஸ், பிள்ளை சி. அப்புக்குட்டி, வ. முத்தையா பிள்ளை, கே. முருகேசு, வி. வேலாயுதம், என், ஆர். விஸ்வலிங்கம், கே. மார்க்கண்டு, எம். சின்னையா, செல்லையா, சண்முகம், செல்லையா, ஆர் வயிரமுத்து, பி. ஆடிப்பிள்ளை, என், ஆழ்வார்பிள்ளை, வ. துரைசாமி, முதலிய பல இந்து சகோதரர்கள் முன்னதாகவே வந்திருந்து பேருக்கப்படுத்தியதும் பாராட்டத் தக்கதே. இம்மலாயாநாட்டு சகோதரர்கள் இனியேனும் கண் விழிப்புற்று எத்தகைய காரியங்களையும் சுயமரியாதையுடனே நடத்துவிப்பார்களென்று நம்புகிறேன்.

ஆர். இராஜகோபாலன், கோலக்கங்சார்.


## ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வாரா. இந்த லேகியத்தில் சுழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை ,, 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவ ரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I R.

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.
*Mysteries of Wedded Life.*
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும்கிடைக்கும்
வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலைவீதி. சென்னை.

விலை ரூ. 1—0—0

# பிராமணனைக் குற்றம் சொல்லமாட்டோம்.

கைவல்யசாமியார் எழுதுவது

தஞ்சாவூர் ஜில்லாவில் பிராமண சபை என்னும் பேரோடு கூடின கூட்டத்தின் உபசரணைக்கமிட்டித்தலைவர் பேச்சில் 'பிராமணர்களை பத்திரிகைகளிலும் பகிரங்கமான சபைகளிலும் இடைவிடாது தூஷணைசெய்துகொண்டு வருவது மன்னியில் இதுவரையிலும் பிராமணர்கள் பொதுவிடங்களில்அடைந்திருக்கும் பதவியிலிருந்தும் அவர்களைத்தள்ளவும் அவர்கள் ராஜாங்க சேவகத்தில் அமர்ந்துகொள்ள அவர்களுக்கு இடம்கொடாமல் செய்யவும் பலமான முயற்சி செய்யப்பட்டு வரும் கிளர்ச்சிகளை எதிர்க்கவாவது பிராமணர்களுக்கு பிரத்தியேகமான சாதனங்களைத் தேடிக்கொள்ளவாவது பிரயத்தனம் செய்யப்படவில்லை' என்பதே முதல் வாக்கியம். இந்த வார்த்தையின் உண்மைப்பிரகாரம் பாப்பார்கள் நடத்திருக்கிறார்களா என்பதை அறிவுடைய உலகமே தெரியட்டும். வேதத்தில் சொல்லப்பட்ட பிராமணனை எவனும் குற்றம் சொல்லமாட்டான். பிராமணனென்னும் பெயரை வைத்துக்கொண்டு எல்லா போக போக்கியங்களையும் அனுபவிக்கசனசமூகங்களைத் தாழ்த்தவும் கஷ்டப்படுத்தவும் செய்கிறவன் எவனாகவிருந்தாலும் குற்றம் சொல்லவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது.

பிராமணனென்றும், பிராமணன் உயர்ந்தவனென்றும், பிராமண தருமமென்றும் சொல்லுவதற்கு ஆதாரம் சாஸ்திரம். சாஸ்திரத்தால் ஏற்பட்ட ஒழுக்கத்தோடுகூடியபிராமண தருமத்தைமேற்கொண்ட பிராமணனை எவரும் குற்றம் சொல்லமாட்டார்கள். 'எவனொருவன் அநித்தியமான உலக வாழ்க்கையில் அழுந்தாமலும் தனது ஆத்மாவின் விருத்தியை மறவாமலும் இருக்கிறானோ அவனே பிராமணனாவான்' என்கிறது சாஸ்திரம். தனது ஆத்ம விர்த்தியை நினைத்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதுமானதன்று. அதற்கு வேண்டிய பிரயத்தனங்களை இடைவிடாது செய்துகொண்டே இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் ஒரு த்விஜனுக்கு வேதங்களும் வேதாங்கங்களுமேமுக்கியசகாயங்களாகும். இவைகளில்கூறிய வழியில் நடந்து மோக்ஷமடையவேண்டுமென்பது த்விஜனுக்கு கடவுளால் ஏற்பட்ட விதியாகுமென்று சொல்லும் சாஸ்திரவிதியின் வழி நின்று மோக்ஷமடையும் பிராமணனை எவனும் தடுத்துத் தூஷிக்க அவசியமில்லை.

"உபநயனம் ஆனவுடன் ஒவ்வொரு த்விஜனும் வேதாத்தியயனம் செய்யத் தொடங்கவேண்டும். எந்த த்விஜன் தனது குடும்பத்திற்குச் சிறப்பாய் ஏற்பட்ட வேதத்தைக்கூட அத்தியயனம்செய்யாதிருக்கிறானோ அவன் பிரஷ்டனாகிறான். வேதங்களை அத்தியயனம் செய்யாது விட்டவனுக்கு தரும ரகசியங்கள் எளிதில் விளங்கா, அவன் காதில் படும் சிறந்த விஷயங்களின் உண்மைப்பொருள் அவனுக்கு விளங்கவேமாட்டாது. சர்வ சாட்சியாய் விளங்கும் பரிசுத்தமான கடவுளைப்பற்றிச் சொல்லுகின்ற வேதங்களை அத்தியயனம் செய்யாது அன்னிய சாகைகளைப்படித்து அதில் விசாரிக்கிறானோ அவனும், வேதங்களை ஓதாது எவனொருவன் மற்றை விஷயங்களில் தனது சக்தியை உபயோகப்படுத்துகிறானோ அவனும் உயிரோடு இருக்கும்போதே தனது ஜாதியிலிருந்து பிரஷ்டனாகிறான்" என்று தரும சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தப் பாப்பான் பிராமணன் என்று சொல்லிக்கொண்டால் குற்றம் சொல்லாமலிருப்பார்களா?

த்விஜத்துவம் நிலைப்பதற்கும் அதற்கு மேற்பட்ட பிராமண்யம் சித்திப்பதற்கும் விரும்பினால் வேதங்களை அத்தியயனம் செய்ய நல்ல ஆசிரியரையடைந்து முதலில் வேதங்களைக் கற்று அதன் பின்பு வேத பாஷ்யங்கள் மூலமாக நான் மூடத்தனமாகச் சொல்லிவரும் வேத வாக்கியங்களின் பொருளையறிந்து அப்பொருளின் வழி நின்று இந்திரியங்களை அடக்கி ஞானத்தையடைய வேண்டும். இந்த பிராமணனைக் குற்றம்சொல்லமாட்டார்கள்.

இவ்வாறு செய்யாது வேதத்தைக்கிளிப்பிள்ளைபோல் தவறுது சொல்லும் திறமை மாத்திரமுடைய ஒருவன் கர்ப்பூர மூட்டை சுமக்கும் கழுதைக்கு ஒப்பாவான். வேத வாக்கியங்களின் பொருள் உணராது உருவேற்றும் அறிவிலிகள் பாரம் தாங்கும் தூணே ஒழிய வேறில்லை. பொருளுணராது வேதங்களை அத்தியயனம் செய்வது சாமபலின் மேல் செய்த ஆகுதிக்கு ஒப்பாகும் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. மனிதன் எதை அடைந்தால் தனது ஆசைகள் யாவும் தீர்ந்து சுகம் அடைவானோ அதை அடைவதற்கு வேண்டிய மார்க்கங்களை அறிவித்தலால்வேதங்களென்று பெயர் கொடுக்கப்பட்டது. பிரத்யக்ஷம், அனுமானம் முதலியவைகளால் அறிய முடியாத ரகசியங்களை அறிவித்தலால் வேதம்என்ற பெயர் உண்டாயிற்று. இவைகளின் பொருள்களை உணர்ந்தவன் சகல நன்மைகளையுமடைவான்' அந்தஞானத்தால் அவன் தனது பாவங்கள் தீரப்பெற்று மேலான பதவியை அடைகிறான். இந்த பிராமணனை எவனும் குற்றம் சொல்லான்.

வேத சுருதி தரும சாஸ்திர இதிகாச புராணங்களெல்லாம் பிராமணன் மிகச் சிறந்தவன் என்று சொல்லுகின்றன. அவன் யார்? அன்னத்தை விற்கும் பாப்பானிலிருந்து ஐகோர்ட் ஜட்ஜிவரையிலும் வருவதற்கு வக்கீல் வேலையில் உயர்ந்த பாப்பானா? தஞ்சாவூர் மகாநாட்டிற்கு வந்திருந்த பாப்பானா? அல்லது அளவிற்கு மீறின ஆசையால் ஆகாரங்களில் பலவற்றையுமுண்டு மார்புக்குமேல் வயிறு தள்ள வயிற்றின் கனத்தால்காயத்திரியின் பிராணயாமம்கூட செய்ய சக்தியற்ற சாஸ்திரிகளா? வைதிகக்கிரியைகளில் வயிறுக்கு மேலுண்டு அது ஜீரணமாக திண்ணையில் புரண்டு புது நாகரீகப்படி சோடாவிற்கு ஏங்கி சுற்றித்திரியும் வைதீகக் கூட்டத்தாரா? இங்கிலீஷ் படிப்பிலேயே பிர்மச்சரியம் தீர்ந்து பணமும் பூமியும்சம்பாதிப்பதிலேயே கிரகஸ்தாசிரமம் நடத்தி கட்சிக்காரன் தயவாலே வானப்பிரஸ்த ஆசிரமும் தாண்டி சந்நியாசமெடுக்கும் வயதும்போய் நெடுநாளாயும் வக்கீல் வேலையில் இனியும்பணம் சம்பாதிக்க பல யுக்திகள் கண்டு பிடித்துக்கொண்டிருக்கும் பிராமணசபைத் தலைவரான டி. ஆர். ராமச்சந்திர அய்யரா? இவர்களையா பிராமணனென்று சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. இவர்களையெல்லாம் சாஸ்திரங்கள் சண்டாளனிலும் கடையனாக ஒதுக்கித்தள்ளி விட்டது.

வருணம் நான்கு, அதில் பிராமணனே மிகச் சிறந்தவன் என்றுவேதங்களெல்லாம்கூறுகின்றன. அதனால் பிராமணன் என்பவன் யார்? தேகம் பிராமணனா? ஜீவன் பிராமணனா? ஜாதி பிராமணனா? ஞானம் பிராமணனா? கருமம் பிராமணனா? தார்மிகன் பிராமணனா? என்னும் கேள்விகளுக்கு உபநிஷத்துக்களில் முக்கியமான வஜ்ரசூசிகோபனிஷத்தில உத்தரம் சொல்லப்பட்டிருக்கிறது. இதைச் சொன்னவர்கள் ரிஷிகளேயல்லாமல், பிராமணர்களை தூஷிக்கிறார்கள் என்னும் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்களன்று அவைவருமாறு:—

தேகம் பிராமணனென்று சொன்னால்சண்டாளர் முதலியோர்களது சரீரங்களும் பஞ்சபூத சம்மந்தம்பிரக ஏற்பட்டதால் தேகங்களில் தாரதம்மியமில்லை. ஜனன மரண முதலியமாறுபாடுகள் எல்லாருக்கும் பொது. மேலும் பிராமணன்வெளுப்பு, க்ஷத்திரியன் சிகப்பு, வைசியன் மானிறம், சூத்திரன் கறுப்பு என்னும் ஒழுங்குமில்லை. ஆகவே தேகத்திற்கும் பிராமண்யம் கூறலாகாது.

ஜீவனை பிராமணன் என்று சொன்னாலோ, முக்காலங்களிலும் பல தேசங்களிலும் உள்ள ஜீவன் ஒரே ரூபமாயிருப்பதாலும் ஒரு ஜீவனுக்கே அநேக தேகங்கள் ஏற்படுவதாக சாஸ்திரங்கள் சொல்லுவதாலும் இதற்கும் விரோதமேற்படும்.

ஜாதியால் பிராமணனாகி விடலாமென்று கூறவும்இடமில்லை. அநேக மகரிஷிகள் தாழ்ந்த ஜாதியிலிருந்து உண்டாயிருக்கிறார்கள். அதுவுமில்லாமல் மனிதனல்லாத மற்றைய பிராணிகளிடமிருந்தும் ரிஷிகள் பிறந்திருக்கிறார்கள். இவர்களும் பரமஞானத்தால் உலகில் விளங்கினார்கள். அதனால் ஜாதியால் பிரமாணனாகமாட்டான்.

ஞான சம்பந்தம் பிராமண்யமென்று சொல்லலாமோ என்றால் மற்ற வர்ணத்தாரிடமிருந்தும் பரம்பொருளைப்பற்றிய அறிவும் பல ஞானமும் காணப்படுவதால் அவ்வாறும் கூற இடமில்லை.

கருமம் பிராமணனென்றாலோ எல்லாப்பிராணிகளுக்கும் மூன்று வித கர்மங்களும் இருப்பதாலும் அவர்கள் எல்லாரும் கரும வசத்தராகவிருப்பதாலும் இவ்விஷயத்தில் ஏற்றத்தாழ்வு எப்படி கற்பிப்பது?

தருமம் செய்பவனே பிராமணனென்று சொல்லுவதற்குமில்லை. மற்றெல்லா ஜாதியாரிடத்தும் தருமமுதலிய அநேக சத்வகுணங்கள் காணப்படுவதால் பிரமாண்யம் சொல்லிவிட முடியாது. பின்பு யார் தான் பிராமணன்?

"ஜாதி குணக்கிரியைகளற்றதாயும், இரண்டற்றதாயும், (பசி, தாகம், சோகம், மோகம், கிழத்தனம், மரணம் என்ற) ஷடூர்மிகளற்றதாயும், (இருத்தல் உண்டாதல், வளருதல், திரிதல், குறைதல், நசித்தல் என்ற) ஷட்பாவ விகாரங்களற்றதாயும், ஸத்தியக்ஞானனந்த அனந்த ஸ்வரூபமாயும், நிர்விகல்பமாயும், மனஸ் சங்கல்பங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும், எல்லாப் பூதங்களிடத்தும் அந்தர்யாமியாகப் பரவியிருப்பதாயும், உள்ளும் வெளியும் ஆகாயம்போலே இடையற்று நிறைந்திருப்பதாயும், அகண்டானந்த ஸ்பாவமாயும், ஒப்புயர்வற்றதாயும், அனுபவித்தே அறியத்தக்கதாயும், அபரோக்ஷமாக பிரகாசிப்பதாயும், உள்ள ஆத்மாவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல நேராக அனுபவிப்பவன் எவனாயிருந்தபோதிலும், கிருதக்கிருத்தியனாகி, (காமக்ரோதம் லோபம் மோகம், மதம் மாத்ஸர்யம்) என்ற அரிஷ்டவர்கள் அற்றவனாய், (சமம, தமம, உபரதி, திதிக்ஷை, ஸமாதானம், சிரத்தை என்ற) ஷட்க ஸம்பத்துக்களைப் பூரணமாகவடைந்து ஸங்கல்பம், திருஷ்ணை, ஆசை, மோகம் முதலியவைகள் நீங்கப்பெற்றவனாய், அகங்காரம் முற்றிலும் ஒழிந்த மனமுடையவனாய் இருப்பவன் யாரோ அவன் தான் பிம்மாமணன்" என்பது வேதங்களின் நிச்சயம். வேறு எவ்விதத்திலும் பிராமண்யம் சித்திக்கவேமாட்டாது. உபநிஷத் பிரமாணத்தையுடைய பிராம்மணனை எவன் குற்றம் சொல்லுவான்?

சத்தியம் சொல்லவந்த வேதத்தில் பல சமயமென்றும் சாஸ்திரமென்றும் அர்த்தமென்றும் பல தெய்வமென்றும் புகுத்தி வேறுபடுத்தி, ஜனசமூகத்தின் ஒரு பகுதியை சமயக் கோட்பாடென்னும் கொடுமையால் மிதித்துக் கசக்கி வறியோராக்கி இழிவடையச்செய்து. இத்தொலையிலும் கஷ்டப்பட்டு சேகரித்துவைத்திருக்கும் சிறிது பொருளையும், அழுகிப்போய் உதவாமற் போய்விட்ட மதத்தின் சிறந்த பிரதிநிதிகளான—தின்று கொழுத்திருக்கும் சோம்பேறிகளான - பார்ப்பனர்களுக்கும் கடவுளின் அன்னசாலைகளிலேயே பலிக்

இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(9-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

இராமனும் இலக்குமனும் சீதையும் வீதிவழியே போவதைப்பார்த்த குடிமக்கள் "ஐயோ! இராமன் வெளியில் புறப்படும்போது நால்வகைச் சேனையும் பின் போமே. இன்று ஒருவருமில்லையே. இராமன் காட்டுக்குப் போனால் நாமெல்லோரும் கூடவே போவோம். காடு நாடாகும், இவ்வயோத்தி காடாகும்" என்று வருந்தினர். அரண்மனை வாயிலையடைந்தவுடன் அங்கே நின்ற சுமந்திரனை இராமன் பார்த்து "உள்ளே போய் அரசரிடத்தில் நாங்கள் விடை பெற்றுப் போக வந்திருக்கிறோமென்று சொல்லும்" எனச் சொல்லியனுப்பி வெளியிலேயே நின்றான். சுமந்திரன் சென்று தெரிவிக்க தசரதன் "என் மனைவிகளை விரைவில் வரும்படி சொல். என் மகனை நான் அவர்களால் சூழப்பட்டவனாகப் பார்க்க விரும்புகிறே"னென்று கட்டளையிட்டான். சுமந்திரன் அவ்வாறே சென்று கூற, அரசனுடைய முந்நூற்றைம்பது மனைவிகளும் கோசலையை முன்னிட்டுக் கொண்டு துக்கமிகுதியோடு வந்து சேர்ந்தார்கள். அதைக்கண்ட தசரதன் 'சுமந்திர! என் மகனை அழைத்துவா' என்றான். சுமந்திரன் வெளியிற் போய் இராமனை அழைத்து வந்தான். அவனைத் தூரத்திலேயே பார்த்த தசரதன் திடீரென்று தாவி எதிர் கொண்டு தழுவப்போனான். அவன் மனைவிகளும் அவனைப் பின் தொடர்ந்தார்கள். அரசனோ கண்ணீரால் கண்கள் மறைந்து இராமனிருக்கும் இடம் காணமற் போக முடியாமல் கொஞ்ச தூரத்திலேயே மூச்சற்று கீழே விழுந்தான். உடனே இராமனும் இலக்குமனும் தாவிப்பாய்ந்து அவனைத் தாங்கிக் கட்டிலில் கிடத்தினார்கள். பெண்கள் கதறினர், தசரதனுக்கு அறிவுவந்தவுடன், இராமன் தங்களுக்கு விடைதர வேண்டினன். அது கேட்ட மன்னன் "இராம! நான் கைகேசிக்கு வரங்களைக் கொடுத்து அவளால் ஏமாற்றப்பட்டேன். ஆகையால் நான் செய்வது ஒன்றும் நியாயமில்லை. என் அறிவு என்னிடமில்லை. ஆதலின் இப்போது என்னை நீ விலக்கி இந்த நாட்டுக்கு அரசனாக இரு" என்றான். இராமன் "நீரே நெடுநாள் ஆளும் நான் காடேகி மீள்வேன்" என்றான். தசரதனை கைகேசி 'இராமனை இப்போதே காட்டுக்கனுப்பும்' என்று ஒரு பக்கத்தில் அந்தரங்கமாக வற்புறுத்திக் கொண்டிருந்தாள். அதனால் தசரதன் "இராமா! போய் வா. நீ நீடூழி வாழ்க.

"ஆனால் இன்று இரவு நீ புறப்படுவதில் எனக்கு கொஞ்சமேனும் பிரியமில்லை. நீ போகவே கூடாது. உன்னை ஒரு இரவு முழுதும் பார்க்கும் நன்மையாவது எனக்குக்கிடைக்குமல்லவா? இது நான் விரும்பிச்செய்ததன்று, கைகேசி என்னை ஏமாற்றி விட்டாள்" என்றான். இராமன் "எனக்கு இந்த அரசில் விருப்பமொன்றுமில்லை. ஆதலின் நான் இப்போதே காடேக வேண்டும். வாக்குறுதியை நிறைவேற்றுவதே சிறந்தது. பரதனுக்கு இப்போதே இந்த அரசைக் கொடும்" என்றான். தசரதன் இராமனைக் கட்டியணைத்துக் கீழே சாய்ந்தான்.

அப்போது சுமந்திரன் கைகேசியிடத்தில் தசரதனுக்குக் கொஞ்சமும் அன்பில்லையென்பதைத் தெரிந்து கொண்டு "அடி! பாதகி! உன் கணவன் பேச்சைக் கேட்காமல் இராமனைக் காட்டுக்கனுப்புகிறாயா? உன்னை வசிட்டர் முதலியவர்கள் அழிக்காமலிருப்பது என்ன விந்தை? உன் தாயைப் போல நீயும் வந்து விட்டாய். ஓர் கந்தர்வனிடமிருந்து பிராணிகள் பேச்சையறியும் திறமையைப் பெற்ற உன் தந்தை, ஓர் சமயம் எறும்புகள் பேச்சைக் கேட்டு நகைக்க, அதன் காரணத்தை உன் தாய் கேட்க, உண்மையைக்கூறினால் தன் தலை வெடித்து விடுமென உன் தந்தைகூற, தலைவெடித்தாலும் சரி உண்மையைக் கூறுமென உன் தாய் கூறினவள் தானே. அவ்வளவு கெட்டவளுடைய மகளாகையால் நீயும் இவ்வாறு நடந்தாய் போலும். உனக்கு வேண்டியவை வாங்கிக் கொண்டு இராமனுக்கு அரசைக் கொடு" என்று கடிந்துரைத்தான். இதனால் கைகேசிக்கு கோபம் அதிகப்பட்டது. தசரதன் "சுமந்திரா! நமது நால்வகைச் சேனைகளும், அழகாலும் பேச்சாலும் மனத்தைக் கவரும் வேசைகளும், வணிகர்களும் இராமனுடன் போகட்டும். நமது தானியக் களஞ்சியம் பணக்களஞ்சியம் யாவும் அவனுடன் போகட்டும். அவனுடன் துணை போபவர்களுக்கு வேண்டும் பொருள்களெல்லாம் கொடுக்கப்படட்டும். பரதன் அயோத்தியில் ஆளட்டும். நான் இப்போது சொன்ன ஏற்பாடுகளுடன் இராமன் காடேகட்டும்" என்றான். அதைக்கேட்டு கைகேசிக்கு பெரும்பயம் பிடித்தது. அவள் "ஓ, மகா யோக்கியரே! இந்த நாட்டிலுள்ள குடிகள் தன தானிய சேனைகள் எல்லாவற்றையும் இராமனுடன் அனுப்பி விட்டு ஒன்றுமற்ற நாட்டை பரதனுக்குக் கொடுக்கப் போகிறீர்? இந்த தானம் வேண்டா"மென்றாள். தசரதன் "சேனை, செல்வம், இவைகளையெல்லாம் அனுப்பக்கூடாதென்று முன்னரே கேட்க மறந்து விட்டு இப்போது குறுக்கே விழுந்து தடுத்தால் ஆக வேண்டிய காரியம் நிற்குமா?" என்றான். கைகேசிக்கு அடங்காத கோபமுண்டாயிற்று. அவள் "சகரன் அசமஞ்சனாகிய மகனைத்தனியே துரத்தியது போல் துரத்தும்" என்றாள்.

அப்போது சித்தார்த்தனென்ற ஒரு பிரதானி 'அசமஞ்சன் ஊர்ப்பிள்ளைகளைத் தண்ணீரில் தள்ளிக் கொன்று வேடிக்கை பார்த்த கொடுஞ் செயலுக்காகத் துரத்தப்பட்டான் இராமன் என்ன குற்றம் செய்தான்? இராமனுக்கு அரசைக்கொடு, இல்லையானால் உலகத்தார் உன்னை நிந்திப்பார்கள்" என்றான். தசரதன் "அடி, சண்டாளி! சித்தார்த்தன்கூறியது கேட்டனை? உன்மனம் இங்கே திரும்பப் போகிறது? நானும் இராமனுடன் காட்டுக்குப் போகிறேன். நீயும் பரதனும் சுகமாக அரசாளுங்கள்" என்றான். இராமன் மன்னனைப் பார்த்து "எனக்குச் சேனையும் செல்வமும் எதற்கு? யானையைத் தந்தவன் அதைக் கட்டும் கயிற்றில் ஆசைவைக்கலாமா? யானையே போகும் போது கயிறு ஒரு பொருட்டா? நாங்கள் எனக்குக் கொடுக்கிறதாக உத்தேசித்த பொருள்களெல்லாம் நான் பரதனுக்குக்கொடுத்து விட்டேன். நான் உடுக்க மரவுரியும் கூடை, மண்வெட்டி, கோடாலி முதலியவைகளையும் வேலைக்காரர் கொண்டு வரட்டும்" என்று கூறினான். கைகேசி தானே மரவுரி கொண்டுவந்து தந்தாள். இராமனும் இலக்குமனும் அதை உடுத்தனர். சீதை கட்டமுயன்று தெரியாமல் வெட்கத்துடன் நின்றாள். உடனே இராமன் அதை அவளுக்கு கட்டி விட்டான்.

அப்போது வசிட்டன் "அடீ தீயவளே! சீதை காட்டுக்குப் போகக்கூடாது. இராமனுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய சிம்மாசனத்தில் இவளே இருந்து அரசாளட்டும். இல்லையென்றால் நாமெல்லோரும் காட்டுக்குப் போவோம். பரதன் தசரதருக்குப் பிறந்தவனானால் அவர் அன்புடன் கொடுக்காத இந்த நாட்டை ஆளச் சம்மதியான். அவனுடைய தந்தையைக் கொன்ற[illegible]. வாழான் மூத்தவனிருக்க இளையவன நாடாளலாமா? சீதை காடேகினால் வேண்டிய செல்வங்களோடு போகட்டும்" என்று கூறினான்.

சீதை மரவுரியுடுத்ததைக் கண்டவரனைவரும் "சீ, சீ என்ன காரியம் செய்தீர்" என்று சினந்தனர். தசரதனோ கைகேசியை நோக்கி "சண்டாளி! சீதை உனக்கென்ன செய்தாள்? அவளையும் ஏன் காடேகச் சொல்கிறாய்? சீதையையும் லக்குவனையும் காட்டுக்குத்துரத்தி நீ என்ன நன்மை பெறுவாய்?" என்று புலம்பினான். பின் தலை குனிந்து வெட்கத்தோடு உட்கார்ந்திருந்தான். அப்போது இராமன் "தந்தையே! எனக்கும் ஒரு வரம் தரவேண்டுகிறேன். என் தாயை மிகவும் ஆதரவோடும் நடத்தவேண்டும். அவளுடைய பகைவர்கள் கையில் அவளைக் காட்டிக் கொடுக்கக்கூடாது. இன்னுமொரு முறை வேண்டிக்கொள்கிறேன். என்னைப் பிரிந்த கவலையால் அவள் உயிரை விடாமலிருக்க வேண்டும். நான் காட்டிலிருந்து திரும்பி வந்து என் தாயை யமனுடைய பட்டணத்தில் போய்த் தேடும்படி வைக்காமல் இருப்பது உம்முடைய பொறுப்பு" எனவேண்டினான்.

தசரதன் "என் உயிர் போகுமென்கிறதே" என் றலமிட்டுப்பின் சுமந்திரனைப் பார்த்து "நல்ல குதிரைகள் பூட்டிய தேரைத் தயாரித்து அதில் இராமனை ஏற்றித் தெற்கே அழைத்துக் கொண்டு போ" என்று சொன்னான். சுமந்திரன் அவ்வாறே தேர் கொண்டுவந்து நிறுத்தினான். தசரதன் செல்வத்தலைவனை அழைத்து சீதைக்குப் போதுமானபடி ஆடைகளையும் நகைகளையும் கொண்டு வந்து தரச்சொல்ல அவனும் அவ்வாறே செய்தான். சீதை அந்த விலையுயர்ந்த நகைகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அதைக் கண்டு கோசலை அவளைத் தழுவிக் கொண்டு "பத்தினிப் பெண்கள் கணவனையே தெய்வமாக நினைப்பார்கள், கெட்ட பெண்களோ கணவனுக்குக் கேட்டையும் சோர நாயகனுக்குநலத்தையும் நினைப்பார்கள். என் மகன் நல்ல நிலையிலிருந்தவன், இப்போது வினைவசத்தால் நாட்டிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறான். இதை ஒரு காரணமாகக் கொண்டு நீ அவனை இகழாமல் தெய்வமாக நினைத்து நட" என்றாள். சீதை "அம்மா! இந்த விவரமெல்லாம் நான் அறிவேன். தாங்கள் என்னை பதிவிரதையல்லாத கெட்ட பெண்களுடன் சேர்த்துப் பேசக்கூடாது. என் தாயைப் போன்ற மகா பதிவிரதைகளிடமிருந்து அந்த தருமத்தை நன்றாக கேட்டறிந்திருக்கிறேன். ஆகையால் என் கணவனை கனவிலும் அவமதியேன்", என்றாள். கோசலை கண்ணீர் வடித்தாள். பிறகு இராமன் கோசலையைப்பணிந்து மற்ற முந்நூற்றைம்பது சிறிய தாய்மாரையும் கும்பிட்டு "நான் தங்களுக்கு ஏதாவது குற்றம் செய்திருந்தால் மன்னிக்க வேண்டும். அப்படிச் சொல்வதாகச் சொன்னாலொழிய என் மனதுக்குச் சமாதானம் வராது." எனக்கூறி விடை கேட்டான். அவர்கள் அழுதார்கள்.

பிறகு இராமனும் இலக்குமனும் சீதையும் தசரதனைக் காலைத் தொட்டு வணங்கி, கோசலையையும் வணங்கினர். இலக்குமன் தன் தமையன் செய்ததைப் போல் கோசலையை வணங்கி தன் தாயான சுமித்திரையையும் வணங்கினான், சுமித்திரை "இராமன் சொற்படி கேட்டுநட, அவனை உன் தந்தையென நினை, சீதையே உன் தாய்" என்று புகன்றாள். பிறகு சுமந்திரன் "காட்டில் வாழ வேண்டியதில் இது முதல் நாள். ஆதலின் இப்போதே புறப்படுக" எனக்கூற இராமன் சீதையைத் தேரிலேற்றித்தானும் தம்பியுடன் ஏறிக் கொண்டான். உடனே சுமந்திரன் வேகமாகத் தேரை நடத்தினான். குடிகளெல்லாரும் அழுது தேரை நிறுத்தச் சொல்லி பின் தொடர்ந்தனர். தசரதனும் அவனுடைய மனைவிமாரும் "எங்கள்

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

# கொட்டாம்பட்டியில் சுயமரியாதை முழக்கம்.

## நாயக்கர் உருவப்படத்திறப்பு, சொற்பெருக்கு.

### ஊர்வலம்.

திரு. வைக்கம் வீரர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் திருவுருவப்படத் திறப்பு விழா வைபவமானது சென்ற 23-12-28 மாலை 4 மணிக்கு துவக்கப்பட்டது. திரு. பி. டி. ராஜன் எம். எல். ஸி. திரு. சௌந்திர பாண்டியநாடார் எம். எல். ஸி., இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர், எம். டி. சோமசுந்திரமுதலியார், திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர், ஆர். எஸ். நாயுடு முனிசிபல் சேர்மன் மதுரை, முதலியவர்கள் பலத்தகரகோஷத்தோடும், ஜே, கோஷத்தோடும், நாகசுரத்தோடும் கொட்டுமுழக்கத்தோடும் ஸ்தானிலிருந்து 4 பர்லாங்தூரமுள்ள கிராமத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் வந்திருந்த வெளியூர் பிரமுகர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஆதித்திராவிடக் குழந்தைகளெல்லாம் அவ்விருந்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. பின்னர் கிராம மைதானத்திலிவ் விழாவுக்கென போடப்பட்டிருந்த பந்தலில் மகாநாடு கூடியது.

### விஜயம்செய்திருந்தவர்

திருவாளர்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர், பி. டி. ராஜன், சௌந்திர பாண்டிய நாடார், எம். டி. சோமசுந்திர முதலியார், ஆர். எஸ். நாயுடு, எஸ். இராமச்சந்திரன் சேர்வை, சொ. முருகப்ப செட்டியார் 'குமரன்' பத்திராதிபர், கே. எஸ். என். பி. நடராஜ நாடார், (பட்டி வீரம்பட்டி) அழகிய சுந்தரம்பிள்ளை, பிச்சப்பா சுப்பிரமணியம், கருமுத்து சிவலிங்கம் செட்டியார் தேவகோட்டை தாலூகா போர்டு மெம்பர், எஸ். பி. ஆர். எம். ராமசாமி செட்டியார் நாட்டரசங்கோட்டை யூனியன் போர்டு தலைவர், சிங்கார வேலுப் பிள்ளை பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தலைவர், முனிசிபல் கௌன்சிலர் காரைக்குடி, சிவகங்கை வக்கீல் வல்லமணி அம்பலம், வார்டன் சோமசுந்திரம் பிள்ளை மேலூர், எட்டு ஷண்முகம் பிள்ளை மேலூர், முத்து நாயக்கர் அட்சராவதானி, துங்கன் சொக்கனுண்டித்தேவர், கற்பகநாட்டுத்தலைவர், மதுரை மகாலிங்கம் பிள்ளை இன்ஷியூரன்ஸ் கம்பெனி ஏஜெண்டு, பக்ருடீன் சாயபு பகதூர், முனிசிபல் கவுன்சிலர் மதுரை பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத் தலைவர் செந்திவேல் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மற்றும் 300 400 பெண்மணிகளும ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண்களும் கூடியிருந்தார்கள்.

### ஆரம்பம்.

கூட்டம் சரியாகமாலை 5 மணிக்கு துவக்கப்பட்டதும் திருவாளர் எஸ். இராமச்சந்திரன் சேர்வை யவர்கள் தலைமை வகித்து திரு. சிதம்பரவேலுப் பிள்ளையவர்களை சுயமரியாதை கீதம் பாடச்சொன்னார். மேற்படியார் திருவாளர்களான நாயர், தியாகராயர், பனகால், கண்ணப்பர், தண்டபாணி, அழகர்சாமிநாயுடு, ராஜன், சேர்வை முதலியவர்கள் மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் உருக்கமாகக் கேட்போர் மனமுருகப்பாடினர்.

பின்னர் திருவாளர் எஸ். இராமச்சந்திரன் சேர்வையவர்கள் தமது திருவுருவப் படத்திறப்புவிழா சொற்பெருக்கை நிகழ்த்தி பெருத்த கரகோஷத்தினிடையேவைக்கம் வீரர் "குடி அரசு" "ரிவோல்ட்" பத்திராதிபர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் திருவுருவப்படத்தை திறந்து வைத்து பூமாலை சூட்டினர்.

### திரு. சேர்வையவர்கள்

திருவுருவப்படத்திறப்புவிழா நிகழ்த்திய போது செய்த சொற்பொழிவு.

கனவான்களே! சகோதர சகோதரிகளே!

நமது சுயமரியாதை தலைவரான நாயக்கர் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கும் கௌரவத்தையும், ஆனந்தத்தையும் அடைய எனக்கு அனுமதி தந்ததற்காக என்னுடைய நன்றியறிதலைச் செலுத்துகின்றேன்.

பெருமை வாய்ந்த நமது சமூகம் ஆரியர்களுடைய சூழ்ச்சியால் படிப்படியாகத் தாழ்த்தப்பட்டு முடிவில் இப்பொழுது இருக்கிற, அதாவது கெர்ப்பம் தரிக்கிறதற்கு ஐயாது உத்திரவு வேண்டும், பிள்ளை பிறப்பதற்கும் அய்யாது உத்திரவுவேண்டும், பேரிடுவதற்கும், பள்ளியில் வைப்பதற்கும், கல்யாணஞ்செய்வதற்கும், இறப்பதற்கும், இறந்தவர்கள் மோட்சத்திற்குப் போவதற்கும் கூட அய்யாது உத்திரவு வேண்டும். கோவிலிற் போய் சுவாமியைக் கும்பிட அய்யாது உத்திரவு வேண்டும், வீட்டுக்கு உள்ளேபோக (கிரகப்பிரவேசம்) அய்யாது உத்திரவு வேண்டும், வெளியே செல்ல அய்யாது உத்திரவு வேண்டும், ஓட்டுக் கொடுக்க அய்யாது உத்திரவு வேண்டும், அபிப்பிராயங்கூற அய்யாது உத்திரவு வேண்டும், என்றவாறு எல்லாம் அய்யர் மயமாய் அய்யாது உத்தரவின்றி அணுவும் அசைக்க முடியாமல் எல்லா விஷயத்திலும் பார்ப்பனருக்கே அடிமையாயிருக்கிற நிலைமைக்கு வந்து விட்டது.

நமது அரும் பெரும் தலைவர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் "ஒரு சமூகம் எல்லா விதத்திலும் முன்னேறுவதற்கு, அடிமைத் தன்மை ஒழிந்து, சுயேச்சை அடைந்து தத்தம் காரியத்தைத் தாமே செய்துகொள்ள வேண்டுமென்ற உணர்வு மிகுந்து சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுதலே மிகவும் அவசியமான காரியம்" என்று கண்டறிந்து சுயமரியாதையென்னும் கொள்கையை ஸ்தாபிக்க முன்வந்தார்.

சுமார் 25 நூற்றாண்டுகளுக்கு முன் ஜீவகாருண்யம் குறைந்து மனிதர்கள் ஜாதிப் பிரிவினை என்னும் பேய் வசப்பட்டு, உயர்ந்த ஜாதி யென்னும் பாகுபாடேற் படுத்திக் கொண்டு தாழ்ந்த ஜாதியாரைத் தீண்டாமல் தள்ளிவைத்துப் பலவித கொடுமைகளுக்குள்ளாகி வந்த காலத்தில் புத்தர் என்னும் ஓர் அவதார புருஷன் தோன்றி பௌத்த மதத்தை ஸ்தாபித்து, மக்களுடைய பேதமையைநீக்கி, ஜாதி பேதத்தை ஒழித்து மனத்தெளிவை உண்டு பண்ணினார். அவ்வாறே, நமது நாயக்கர் அவர்களும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாருடையமனத்தையும் தமது இடைவிடா உழைப்பினால் அடிமை உணர்ச்சி யென்னும் களையை வேரோடு பறித்தெறிந்து, சுயமரியாதை உணர்ச்சி யூட்டி வருகிறார்.

ஒவ்வொரு பார்ப்பனரல்லாதான் மனத்திலும் சுயமரியாதை உணர்ச்சி வளர்ந்து கொண்டு வருகிறது. இவ்வுணர்ச்சியை தலையெடுக்கவொட்டாது அடிப்பதற்குத் தயாராகவிருக்கும் புரோகிதப் புளுகையும், பஞ்சாங்க வஞ்சகத்தையும், 'குடி அரசு' என்னும் தடியால் நமது நாயக்கர் சின்னாபின்னப்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

திரு நாயக்கர், வெகு காலம் வரையில் தேச நன்மையைக்கருதி ஒத்துழையா காங்கிரஸ் கட்சியிலிருந்து பாடுபட்டவர். அன்று முதல், இன்று வரையில் அக் கொள்கைகளில் ஒன்றையும் விடாது பின்பற்றி நடந்து வருகிறார். அவர் வைக்கத்தில் காட்டிய வீரமும், மதுவிலக்குக்காகப்பட்டபாடும் கதரைப் போற்றும் ஆற்றலும், நமது நாயக்கருடைய திடசித்தத்தையும், தியாக புத்தியையும் உண்மை குணத்தையும் உயர்த்திக் காட்டும்.

இன்னும் நமது நாயக்கர் மெய்வருத்தம், பொருள் நஷ்டம், உலகப்பழி, முதலியனவற்றையும் கவனியாது இடைவிடாது உழைத்துக் கொண்டு வருகின்றார்.

சகோதர, சகோதரிகளே! பார்ப்பனர்கள் பலரும், நம்மவர்களிற் சிலருங்கூட, நமது நாயக்கர் அவர்களின் சுயமரியாதைப் பிரசாரத்தின் ஆழ்ந்த நோக்கத்தையும், சிலாக்கியமானமுடிவையும் நன்றாய் அறிந்து கொள்ளாமல், அவர் நிரீச்சுர வாதம் செய்வதாகவும் போதிப்பதாகவும சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சகோதர, சகோதரிகளே! நிரீச்சுரவாதம் என்பது என்ன? கடவுள் இல்லை என்று சொல்லுவதல்லவா? நமது நாயக்கர் எந்தப் பத்திரிகையில் எந்தப் பிரசங்கத்தில்கடவுள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்? அவர் சொல்லுவதெல்லாம் "ஆரியர்கள் நமது சமூகத்தினரைக் கெடுப்பதற்காக, அடிமைப் படுத்துவதற்காக, சொலவி வைத்திருக்கும் தந்திரமான—ஏமாற்றமான,—பொய்யான சாஸ்திரங்களை நம்பாதீர்கள், அவர்கள் நம்மை அநுஷ்டித்து வரும்படி வற்புறுத்தும் அனுசாரங்களைப் பின் பற்றாதீர்கள்" என்பதே. இவை நிரீச்சுரவாதமாகுமா? நமது தலைவர் நாயக்கர் அவர்கள் கூறியது யாவும் நம்முடைய சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவே என உணர்ந்து பார்ப்பனீயத்தையும், புரோகிதத்தையும் அவற்றின் வழி வந்த சாஸ்திரங்களையும் புறக்கணித்து சுயமரியாதை உணர்ச்சியை வளர்த்து உன்னத நிலைமையடைவோமாக! என்றுசொல்லி உருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

பின்னர் "குடி அரசு"ப் பத்திரிகையின் தம்பியான "குமரன்" பத்திரிகையின் ஆசிரியர் திரு சொ. முருகப்ப செட்டியார் அவர்களைப் பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

முருகப்ப செட்டியார்.

பேசியதாவது:—சகோதர சகோதரிகளே! இன்று நாம், மக்கள் சமத்துவமாக வாழவேண்டுமென்றும், ஒரு கூட்டத்தார் பிற வகுப்பாரை அடிமைத்தனத்திலாழ்த்தி வருவது நியாயமல்லவென்றும், அதற்காகக் காங்கிரசிலும் பெரிதும் ஈடுபட்டு, கதர், மது விலக்கு, தீண்டாமைகளில் முன்னணியில் வேலைசெய்து வந்த நமது வைக்கம் வீரர் திரு நாயக்கரவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழா வைபவத்தைக் காணவந்த என்னையும் சில வார்த்தைகள் கூற தலைவரிட்ட பணிக்கு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். நமது பிராமணரல்லாதார் கல்யாணம் செய்வது முதல் பிள்ளை பெறுவது, பேரிடுவது, பள்ளியில் வைப்பது என்பது போன்ற எல்லாச்சடங்குகளுக்கும் ஒருவனை எதிர்பார்ப்பது ஒழியவேண்டும். உலகத்திலே பிறந்த மக்கள் எல்லாம் சமமென்ற உணர்ச்சி பெறவேண்டும். உயர்வு தாழ்வு உண்டென்னும் அடிமைப்புத்தி ஒழியவேண்டும். தாழ்த்தப்பட்டவரென்றால் நம்மில் சிலர் கோபப்படுகிறார்கள். கோபப்படுவதால் பயனில்லை. ஏனென்றால், பார்ப்பனனது நூலை நம்பும் வரையில் நாம் முதலியாராகவோ, செட்டியாராகவோ, சேர்வையாகவோ இருந்தாலும் பார்ப்பனனுக்குநாமெல்லோரும் சூத்திரர்கள்தான். அதாவது அவர்களது வைப்பாட்டி மக்கள்தான், அடிமைகள்தான், வீரமில்லாதவர்கள்தான். இதையாரும் மறுக்க முடியாது. பண்டைக்காலத்தில் இம்மாதிரி ஜாதிகளிருக்கவில்லை. வேதகாலத்தில்கூட 4 ஜாதிகள்தான் இருந்தனவாம். இப்போது 4000 ஜாதிகளாய்விட்டன. நமது சங்க நூல்களில ஜாதிப்பிரிவுகள் கிடையா. தமிழ்வேதமாகிய திருக்குறளிலும் கிடையாது. பிராமணர்கள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, என்ற நான்குவகுப்பை வகுத்து இப்போது 4000 ஜாதிகளாக்கி விட்டார்கள். பார்ப்பனனென்பவன் வேதமோதும் தொழில் என்பதைச் செய்ததாகவும் பண்டைநூலில் தெரியவில்லை. சிலப்பதிகாரம் மணிமேகலையில் மாதவிக்கும் கோவிலனுக்கும் தூதுசென்றவன் பார்ப்பனன் என்றுமாத்திரம் காணப்படுகிறது. மற்றும் இதுபோன்ற தூது சமயங்களில் பார்ப்பான்பெயர் காணலாம். இப்போதும் அத்தொழிலை அக்கூட்டத்தினர் செய்கின்றனர். இவர்கள் பிராமணர்களா? பதினாயிரக்கணக்கானவர்கள் மூடபழக்க வழக்கமென்னும் இருட்டுக்குழியில் அமிழ்த்தப்பட்டிருக்கின்றனர். பகுத்தறிவென்னும் கயிற்றால் குழியின்மேலிருப்பவர்கள் இழுக்க ஆரம்பிக்கும்போது கீழேயிருப்பவன் கீழே இழுக்கிறான். நமக்கு மேலே இருக்கிறவன நம்மையும் உள்ளேதள்ளப் பார்க்கிறான். அதினின்றும் வருவது இழுப்பவனின் தைரியத்தையும் திறமையையும் பொறுத்திருக்கின்றது. நமது தகப்பனோ தாயாரோ இறந்துவிட்டால் திதிகொடுக்கிறோம். திதி கொடுக்கும் பார்ப்பான் தமிழன். நமது தகப்பனர் பேசிய பாஷையோ தமிழ். ஆனல், நாமேன் வடமொழியில் திதி கொடுக்கவேண்டும் என்பதை யோசித்தால் இங்குதான் பார்ப்பனனது தந்திரம் இருக்கின்றது. அறியும் நமது கண்ணுக்குத்தெரியாது மனதுக்கு எட்டாது என்று சொல்லிக்கொண்டே ஒவ்வொன்றையும்நம்பச்சொல்லுகிறான். இதில்தான் அவன் சாமார்த்தியம் இருக்கின்றது. நமக்கு விளங்காத வார்த்தைகளால்வாழைப்பழம் வைத்தேன் பூ வைத்தேன் என்று சொல்வதைதவிர வேறொன்றுமில்லை.

கடவுள்எங்கும் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். எங்குமுள்ள கடவுளைக் கோவிலினுள் கட்டிப்போட்டு பூட்டவேண்டிய அவசியமென்ன? கடவுள் ஒருமனிதனிடம் விருப்பும் ஒருவனிடம் வெறுப்பும் கொள்வாரா? குன்றக்குடி கோவிலைப்பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். ரோட்டில் கிடக்கும் சாணி, மலம், முதலியவைகளை மிதித்துக்கொண்டுதான்பட்டர்கள்கோவிலுக்குள்ளும் சாமிக்குப் பக்கத்திலும்செல்கின்றார்கள். அங்கேயே தேங்காய் உடைத்த தண்ணீர்; அங்கேயே பஞ்சாமிர்த அபிஷேகம்; அங்கேயே பால், எண்ணெய் அபிஷேகம்; அதிலேதான் வெளியிலிருந்து நடந்துவந்த பட்டர்கள் காலெல்லாம் மிதிபட்டுவரும் கால் பட்ட தண்ணீர். இவைகள் கலந்துஜல தாரையில் விழும்போது அதை நம்மவர்கள் தீர்த்தமென்று உட்கொள்ளுகின்றார்கள். இதனால் மனிதனுக்கு நோய் உண்டாகாமலிருக்குமா? (அந்தசமயம் திரு. சௌந்திர பாண்டிய நாடாரவர்கள் ஹெல்த்தா பீசருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டுமென்று சொன்னதும் பெருத்த சந்தோஷ ஆரவாரம் கூட்டத்தில் காணப்பட்டது) வடகலை, தென்கலை சம்பந்தமாகவும், சிவன், விஷ்ணு ராமாயண பாரதப்புரட்டு சம்மந்தமாகவும் சில வார்த்தைகள் கூறிய பின்னர்திரு. நாயக்கரவர்களில்லையானல் நாம் சற்றும் சுயமரியாதையுணர்ச்சி இக்காலத்தில் அடைந்துகொள்ள சந்தர்ப்பமில்லை. நாம் மூட்டாள்களாகத் தானிருக்கக்கூடும். எனவே, இந்த இயக்கத்தால் தமிழ்வளரும், சமத்துவம் நிலவும், சகோதரத்வம்சுயமரியாதையுமரும் இதுதான் நாயக்கர்தொண்டு.எனவே,நீங்கள் அதை ஆதரிக்குமாறுகேட்டுக்கொள்கிறேன் என கூறி முடித்தார்.

அழகர்சாமி நாயுடு.

பேசியதாவது:— எனக்கு முன்பேசிய திரு. செட்டியாரவர்கள் நாயக்கரது பெருமையைக் கூறிவிட்டார்கள். நானும் அவர்களது அடிச்சுவட்டைப் பற்றியுள்ள ஓர் தொண்டன்தான்.

இந்நாட்டை பாழாக்கியதெல்லாம்வேதம், புராணம், புரோகிதம் என்னும் பிராமணியமே என்பதை எவரும் மறுக்கமுடியாது. இக்கொடுமைகளை ஒழிக்க கபிலர், வள்ளுவர் போன்ற பலர் தோன்றினும் அவர்களுக்குப் போதுமானதொரு வசதிஏற்படவில்லை. தற்பொழுது ஆரிய சமாஜத்தார் சீர்திருத்தம் செய்வதாகச் சிலர் சொன்னார்கள். ஆனல் ஆரிய சமாஜத்தார் பூணூல் போடுவதால் ஒருவனை உயர்த்திவிடுகிறார்கள். 100-க்கு 97-பேருக்கு பூணூல்போட்டு உயர்த்துவதைப்பார்க்கிலும் 100-க்கு 3-பேருடைய பூணூலை அறுத்தெறிந்து விடுவார்களானல் அதுதான் சமத்துவத்துக்கப் பாடுபடுவதாக நினைக்கலாம். கடவுளானவர் தனக்குப் பூஜைபோடுமாறுகேட்டதாகபூசாரிசெல்லி ஊரில் ஆடு, கோழி பன்றி முதலிய மிருகங்களைக் கொலைசெய்து சாப்பிடுகிறான். கடவுள் சாப்பிட வேண்டுமானல் காட்டிலோ, ரோட்டிலோ போகும் ஆடு, மாடு, கோழிகளைபிடித்துத் தின்னக்கூடாதா? அதுமுடியாமலா மனிதனை கேட்கிறது? இதுஒரு பெரிய மூடவழக்கம். கவர்ன்மெண்டார் சொத்திருந்தால் ஆஸ்திவரி, நிலமிருந்தால் நிலவரி, தொழிலிருந்தால்தொழில்வரி, என்பதாக வரிகள் விதித்திருக்கிறாகள், ஆனல் ஒன்றுமில்லையானல் கிடக்கிறான் அன்னக்காவடி என்று விட்டுவிடுகிறார்கள். (பெருத்த நகைப்பு) கவர்ன்மெண்டிலே, கல்யாணம் செய்தால் 25-ரூ. வரிகேட்பதில்லை. ஆனல், பார்ப்பனர்களோ சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் மதத்தின்போரால் ஒவ்வொருவனிடமிருந்தும் கொள்ளையடித்து மக்களை ஏழ்மைப்படுத்தி விட்டார்கள்; கொடுமைப்படுத்தி விட்டார்கள். இவ்வித நிலைமையிலிருந்து மக்கள் முன்னேற யோசிப்பதற்குக்கூட வழியில்லாத, படித்தவர்கள் பணக்காரர்கள் எதிர்ப்பினிடையே இப்பிரசாரம் நடந்து வருவதை நீங்கள் ஆதரிக்கும் அறிகுறியாக இங்கு வந்துள்ளதே விளங்குகின்றது என்று கூறினர். அடுத்தாற் போல்,

திரு. பிச்சப்பா சுப்பிரமண்யம்.

செட்டியாரவர்கள் பேசியதாவது.—திரு. நாயக்கரவர்கள் உண்மையாகப்பாடுபடுபவர். பெரிய பிரபுக்கள் ஜமீன்தார்கள் சினேகமிருந்தாலும் ஏழைகள் விஷயத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திலும் யார் எதிர்ப்பையும் சிறிதும் பொருட்படுத்தாமல் உறுதியாய் வேலைசெய்பவர். பிராமணர்கள் கொடிய அக்கிரமம் செய்கிறார்கள். பிராமணியக்கொடுமைகள் எங்கள் ஊர் பக்கம் ஜாஸ்தி. அவ்வளவு அக்கிரமத்தினிடையே நாங்கள் உங்கள் முன்னிலையில் பேசுவதே திடகாத்திரமல்லவா? பிராமணர்களிடையே திரு. நாயக்கரைத்தவிர நாமெல்லோரும் நிச்சயமாய் ஏமாந்துபோவோம். பிராமணர்கள் நம்மவர்களைப்பார்த்து நல்லவர்கள் என்று சொல்கிறாகள். நல்லவர்களென்றால்என்றும் ஏமாந்த சமூகமென்பதுதான் அவர்களுடைய அர்த்தம். மனிதர்எல்லோரும் சமமென நினைத்துக்கொள்ளவேண்டும். தீண்டாதார்க்கு விடப்படாத கோவிலை வெடிவைத்து இடித்துவிட வேண்டும். நடுநிலையில் நின்று யார் தொண்டாற்றுகிறார்களோ அவ்வியக்கம் பரவும் என்றும், பெண்கல்வி குறித்தும் பேசினர். பின்னர்,

கருமுத்து சிவலிங்கம் செட்டியார்

பேசியதாவது:—இந்த சந்தர்ப்பத்தில் என்னைப் பேசும்படி எனக்கு சந்தர்ப்பம் அளித்தவரும், என் ஊர்வாசியுமான தலைவரவர்கள் அனுமதியைப் பெற்று சில வார்த்தை பேச விரும்புகிறேன். எனக்கு முன்பேசியவர்கள் போன்று எனக்கு அத்தகையவாக்கு வன்மையில்லையாயினும், ஏதோ சில வார்த்தை எனது நண்பரும் கூட்டத்தலைவருமான இராமச்சந்திரன் சேர்வையவர்களின் அன்புபற்றி பேசுகிறேன். நமதுநாட்டில் பிறப

(இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க.)



குடி அரசு

ஈரோடு விபவ-ஞூ மார்கழி-மீ 23-உ.

# காங்கிரஸ் ஏமாற்றுத்திருவிழா முடிவுபெற்றுவிட்டது.

### ஒற்றுமைத்தீர்மானத்தின் யோக்யதை.

43-ம் வருஷத்திய காங்கிரஸ் என்னும் இவ்வருஷத்திய ஏமாற்றுத் திருவிழா ஒருவாறு முடிவு பெற்றுவிட்டது. இந்நாடகம் இந்நிலையில் முடிவு பெற முக்கிய வேஷதாரியாய் திரு. காந்தியே நடித்திருப்பது மிகுதியும் குறிப்பிடத்தக்கது.

எனவே அம்முக்கிய நடிகராகிய திரு. காந்தி இந்நாடகத்தில் கலந்து கொண்டதற்கு அவர் (திரு காந்தி) சொல்லும் முக்கிய காரணம் என்னவென்றால்:— 'ஒற்றுமையின் அவசியத்தைக் கோரியே' இம்மாதிரி கலந்து கொண்டாராம். உண்மையில் ஒற்றுமை ஏற்பட்டதா? அல்லது ஒற்றுமை வாசனைசிறிதாவது அங்கு ஏற்பட்டதா? திரு காந்தியின் ஒற்றுமைத்தீர்மானத்திற்கு முன்னும்சர்வகட்சி மகாநாட்டின் ஒற்றுமைத்தீர்மானத்திற்கு முன்னும் நாட்டில்எத்தனை கட்சியும் வகுப்புபிரிவும் இருந்ததோ அதைவிட அதிகமான கட்சியும் பிரிவினைகளும் தீர்மானத்திற்குப்பின் ஏற்பட்டிருப்பது காங்கிரஸ் நடவடிக்கையை கவனித்தவர்களுக்கு தெள்ளென விளங்காமல்போகாது. இந்த இடத்தில் நமது (இந்தியர்களின்) லட்சியம் என்ன என்பதை கவனிக்கவேண்டும்.

அதாவது, நமது லட்சியம் ஒற்றுமையா, விடுதலையா என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படாமல் மாறி மாறி பேசப்பட்டே வந்திருக்கின்றது.

சாதாரணமாய் நமக்குத் தெரிந்த 1907 ஆம் வருஷத்திய சூரத்து காங்கிரசில் ஒருவருக்கொருவர் கலகமும் அடிதடியும் நடந்து கலைந்தது முதல் இதுவரையில் அரசியல் ஒற்றுமையைப்பற்றி பேசாத நாள்கள் மிக சொற்பம் என்று தான் சொல்லவேண்டும். ஒற்றுமையைப்பற்றி பேச ஆரம்பித்த பிறகே மிதவாதி, அமிதவாதி, சுயேச்சைவாதி, சுயராஜ்யவாதி, இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதார்கள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய பலகட்சிகள் தோன்றியதுடன் சமீபகாலத்தில் ஒத்துழைப்பவர்கள், ஒத்துழையாதார்கள், சுயராஜ்யக் கட்சிக்காரர்கள், குடியேற்றநாட்டு அந்தஸ்துக்காரர்கள், பூரண சுயேச்சைக்காரர்கள் என பவர்களாகிய எத்தனையோ விதகட்சிகளும் அபிப்பிராய பேதங்களும் வளர்ந்து கொண்டே, வந்தும் வந்து கொண்டும் இருக்கின்றதை யாரும் மறைத்துவிட முடியாது.

இது தவிர, சமய சமூக இயலிலும் பல கட்சிகளும் அபிப்பிராய பேதங்களும் இருந்துகொண்டு வருகிறது. சுமார் 20 வருஷ காலமாகஒற்றுமை! ஒற்றுமை! என்று பேசிக்கொண்டு அதற்காக செலவழித்த நேரமும் அறிவும் ஊக்கமும் இதுவரை நாட்டுக்கு என்ன பலனைக்கொடுத்தது அல்லது எவ்விதவெற்றியைஅளித்ததுஎன்பதையோசித்துப் பார்க்கும்படி வாசகர்களைகேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஒற்றுமையைப்பற்றி பேசும் எல்லோரும் அனேகமாய் மனதிலொன்றும் வாக்கிலொன்றும் நடவடிக்கையிலொன்றுமாக யோக்கியப் பொறுப்பற்ற தன்மையில் தங்கள் தங்கள் சுயநலத்தின் பொருட்டு பிறரை, சிறப்பாக இந்திய நாட்டு பாமர மக்களாகிய 100-க்கு 99 பேரை ஏமாற்றித் தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்ள செய்த சூழ்ச்சியே அல்லாமல் வேறு என்ன நல்லெண்ணம் இவ்வொற்றுமை முயற்சியில் இருந்து வந்தது என்று யாராவது சொல்ல முடியுமா என்று அதட்டியுடன் கேட்கின்றோம்.

> வாருங்கள்! வாருங்கள்!!
>
> **சுயமரியாதை மகாநாடு**
>
> செங்கற்பட்டில் பிப்ரவரி மாதத்தின் மத்தியில் நடக்கப்போகின்றது! சைமன் கமீஷனுக்கு என்ன சொல்லுவது என்பதை அங்குதான் தீர்மானிக்கப் போகின்றது. எல்லாரும் வாருங்கள். பதினாயிரக் கணக்கான மக்கள் கூடத் தகுந்த ஆடம்பரமான பலத்த ஏற்பாடுகள் இப்பொழுதிருந்தே நடைபெற்று வருகின்றன. வரத்தவறாதீர்கள்.

இதற்கு ஆதாரம் கண்டு பிடிக்க நாம் அதிக தூரம் போக வேண்டியதில்லை. உயர்ந்த தத்துவம் என்று கருதப்பட்ட ஒத்துழையாமை இயக்க சம்மதமாகவும் உண்மையான மனிதர் என்று கருதப்பட்ட திரு. காந்தி சம்மதமாகவும் ஏற்பட்ட ஒற்றுமைகளின் யோக்கியதைகளைப் பற்றி கவனித்துப்பார்த்தாலே போதுமானது.

அதாவது திரு. காந்தி சிறையில் இருக்கும்போது டில்லி, அலகாபாத், நாகப்பூர், காகினாடா முதலிய இடங்களில்ஏற்பட்டஒற்றுமைகளும், திரு. காந்தி வெளிவந்த பிறகு சுமார் 4, 5 தடவை ஏற்பட்டஒற்றுமை ஒப்பந்தங்களும்,ஒற்றுமைத் திட்டங்களும் அதாவது காந்திதாஸ் நேரு ஒப்பந்தமும், காந்தி தான் ஒப்பந்தமும், திரு. காந்தி தானாகவே தனியாக ஒற்றுமைக்காக என்று திட்டங்களை மாற்றிக்கொண்ட வகையிலும் பெல்காம் காங்கிரசில் செய்துகொண்ட ஒப்பந்தமும், மற்றும் இந்து முஸ்லீம் ஒப்பந்த ஒற்றுமைகளும், பட்டினியிடத்தின் மூலம் செய்துகொண்ட ஒற்றுமைகளும், மற்றும 'எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிப்போகிறேன்'' "இமயமலைக்குப் போய்விடுவேன்" என்று மிரட்டி செய்த ஒற்றுமைகளும் கடைசியாக 'ராட்டினம் தான் கதி' என்று சொல்லி அரசியலில் இருந்து விலகிக்கொண்டதாய் விளம்பரப் படுத்தியதின் மூலம் செய்த ஒற்றுமைகளும் இதுவரை என்ன பலனைக்கொடுத்தன?

கொள்ளைக்காரர்கள் தங்களுக்குள்செய்து கொள்ளும் ஒற்றுமை போலவும், போலீசாரும் திருடர்களும் செய்துகொள்ளும் ஒற்றுமை போலவும் கருதி செய்யப்பட்டு வந்திருக்கின்றதே யல்லாமல் நாட்டின் நன்மையைக் கருதி இதுவரை எந்தவிதமான ஒற்றுமையாவது செய்யப்பட்டிருக்கின்றதா? என்று கவனித்துப்பார்க்க வேண்டுகின்றோம். அது போலவே இவ்வருஷ காங்கிரஸ் ஒற்றுமைத் தீர்மானத்தையும் சற்று கவனிப்போம்.

அது, திரு. காந்தி பிரேரேபிக்கிறார் என்கின்ற சலுகையின்பேரில், ஏழில் நாலுபங்கு ஓட்டுகளால் நிறைவேறி இருக்கின்றது. இது ஒற்றுமைத்தீர்மானமாகுமா? சாதாரணமாய் ஒத்துழையாமையின்போது இம்மாதிரியும் இதைவிட இன்னும் குறைந்த மைனாரிட்டியுமாக ஏற்பட்டு நிறைவேறிய அநேக தீர்மானங்களை இதே திரு காந்தி ஏற்றுக்கொள்ளாமல் மைனாரிட்டியாரின் லட்சியத்தையே மிகுதியும் கவனித்து மைனாரிட்டியாருக்கு இணங்கியே வந்திருக்கின்றார். கடைசியாக ஒத்துழையாமையை சித்திரவதை செய்த பெல்காம் காங்கிரசின்போதுகூட ஒத்துழையாமைக்கு விரோதமாய் இப்போது கல்கத்தாவில் இருந்த மைனாரிட்டி விகிதத்தில் காலில் ஒருபங்குகூட இல்லாதநிலையில் எப்படியாவதுதான் தப்பித்தால்போதும் என்று கருதி அடியோடு விட்டுவிட்டு ஓடிவிட்டார். நாமேநேரில் அதன்காரணம்கேட்டபோது, மூன்று மாதம் வாய்தா கொடுத்திருக்கின்றேன், அது கழிந்தபிறகு மணலை கயிறாகத் திரித்துவிடுகிறேன் பயப்படவேண்டாம் என்று சொன்னார். மூன்று மாதம் கழிந்த பிறகு இவ்விஷயமே அவருக்கு ஞாபகமில்லாமல் போய்விட்டது. அப்படியிருக்க இப்போதுநிறைவேறிய இவ்வளவு பெரிய மைனாரிட்டிஉள்ள தீர்மானம் ஒற்றுமைத் தீர்மானமாகுமா?

திருவாளர்கள், சிந்தாமணி, சாப்ரு, சிவசாமி அய்யர், ராமசாமி அய்யர் ஆகிய சென்னை அய்யர் பார்ப்பனர்களும், மாளவியா, நேரு முதலிய வடநாட்டுப்பார்ப்பனர்களும் மற்றும் சில சூழ்ச்சிக்காரப்பார்ப்பனர்களும் இந்திய மக்களில் பல்வேறு வகுப்புகளையும் வகுப்பு சமத்துவத்தையும் சம சந்தர்ப்பத்தையும் ஒழிப்பதற்கும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும் ஒன்றுசேர்க்கின்றார்கள். எனவே அந்தக் கைதான் இப்போது வலுத்த கையாதலால் அவர்களுக்கு நல்ல பிள்ளையாய் நடந்தால்தான் தனது மஹாதிபதி பட்டம் நிலைக்கும் இல்லாவிட்டால் ஆட்டம் கொடுத்துவிடும் என்கின்ற ஒரே ஒரு எண்ணமில்லாமல் இத்தீர்மானத்தை பிரேரேபித்ததில் திரு காந்திக்கு வேறு ஏதாவது எண்ணமிருந்திருக்க

கூடும் என்று யாராவது முன்வந்து சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்?

உண்மையாக அத்தீர்மானத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமை உண்டா? பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை உண்டா? சீக்கியர் ஒற்றுமை உண்டா? அல்லது குடியேற்ற நாட்டு அந்தஸ்து—பூரண சுயேச்சை என்கின்ற கட்சிகள் ஒற்றுமையாவது உண்டா? என்று கேட்பதுடன் மற்றும் புதிதாக எத்தனை மாகாணப் பிரதிநிதிகள் மனவருத்தமும், வகுப்பார்கள் மனவருத்தமும் ஏற்பட்டது என்பதை காங்கிரஸ் நடவடிக்கைகளைப் படித்தவர்களுக்கு விளங்காமல் போகாது. இது தவிர இவ்வொற்றுமைத் தீர்மானத்தால் சுயேச்சைக் கட்சிக்காரர்களுக்குள்ளாகவே இரு பிரிவினைகளும், முஸ்லீம்களுக்குள்ளாகவே பல பிரிவினைகளும் ஏற்பட்டிருப்பதோடு மிதவாதிகளுக்குள்ளும் சுயாட்சி வாதிகளுக்குள்ளும் தீர்மானத்தின் பகுதி பாகம் ஒப்புக்கொள்ளவும் பகுதி பாகம் தள்ளப்படவுமாய் ஏற்பட்டிருக்கிறதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு ஊரில் இரண்டு பைத்தியக் காரர்கள்.

இதுமாத்திரமல்லாமல் 'ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள்' என்பது போல் காங்கிரஸின் பேரால் பாமர மக்களிடம் போய் ஒரு கூட்டம் வெள்ளைக்காரர்களின் ஆட்சியை அடித்துத் துரத்தி ஒழித்துவிடவேண்டும் என்றும், மற்றொரு கூட்டம் வெள்ளைக்காரர்கள் நமக்கு இன்னின்னவிதமான சீர்திருத்தம் கொடுக்கவேண்டும் என்றும் பிரசாரம் செய்யவும், இதன்மூலம் சிலர் ஜெயிலுக்குப் போகவும் உதைபடவும், சிலர் அவர்கள் பெயரைச்சொல்லி மக்களை ஏமாற்றவும் தாராளமாய் வேண்டுமென்றே இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வளவுவித அபிப்பிராய பேதக்காரர்களையும் கட்சிக்காரர்களையும் நாம் ஒன்று கேட்கின்றோம். இவ்வபிப்பிராய பேதங்களும் கட்சிகளும் பொதுநலத்தை உத்தேசித்தா? அல்லது எந்த அபிப்பிராயம் கொண்டால், எந்தக் கட்சியில் சேர்ந்தால், நமது வகுப்பு நலமோ நமது தனி சுயநலமோ ஏற்படும் என்கின்ற எண்ணத்தைக்கொண்டா? என்று கேட்கின்றோம். உதாரணமாக முகமதியர்களில், ஜனாப்கள்,

ஜின்னா, மகமதலி, ஷெளக்கத்தலி, சர் அப்துர் ரஹீம், மகமதபாத் ராஜா, டாக்டர் அன்சாரி, சர் ஷாபி, ஆகாகான் முதலியோர்கள் பொதுவாக இந்தியா முழுவதுக்கும் பிரயத்தனப்படுகின்றார்களா அல்லது தங்கள் வகுப்புக்கு மாத்திரம் பிரயத்தனப்படுகின்றார்களா அல்லது தங்கள் சுயநல வாழ்வுக்கே பிரயத்தனப்படுகின்றார்களா அல்லது தங்கள் பெயரும் பொதுவாழ்வில் அடிபடட்டும் என்கின்ற ஆசையின் மீது பிரயத்தனப்படுகின்றார்களா என்று பார்த்தால் மகமதிய கனவான்களின் பொதுநல அபிப்பிராய பேதத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது. இது போலவே திருவாளர்கள் மாளவியா, நேரு, சிந்தாமணி, சாப்ரு, சர். சிவசாமி, சர். ராமசாமி, அன்னிபெசண்டு, ஜவஹர்லால், சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, C. ராஜகோபாலாச்சாரி, எ. ரங்கசாமி அய்யங்கார், சாம்பமூர்த்தி, அரிசர்வோத்தமராவ், பட்டாபிசீதாராமய்யா முதலிய பார்ப்பனர்களின் யோக்கியதைகளை கவனித்துப் பார்த்தால் இந்த தியாகிகளுக்குள் பொதுநல அபிப்பிராயபேதத்தின்மூலம் கக்ஷியா அல்லது சுய வகுப்புநலம் சுயவாழ்வு நலம் ஆகியவைகளின் மூலம் அபிப்பிராயபேதமா? என்பவைகள் விளங்காமல் போகாது. மற்றபடி காங்கிரசில் அதிகமாக அடிபட்ட பெயர்களில் முக்கியமானவைகள் திருவாளர்கள் காந்தி, போஸ், பெசண்டு அம்மாள் ஆகிய பார்ப்பனரல்லாதார்களாகும். இவர்களில் திரு. காந்தியைப்பற்றி யோ என்றால், ஏதாவது ஒரு கொள்கை திரு. காந்தியை நடத்துகின்றதா அல்லது திரு. காந்தியால் ஏதாவது ஒரு கொள்கை நடத்தப்படுகின்றதா என்பதை கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருப்பதுடன் அவருடைய இப்போதைய கொள்கையாவது என்ன என்பதே நம்மால் கண்டுபிடிக்க முடியாததாயிருக்கின்றது.

திரு. போஸ் அவர்களுக்கு, எந்தவிதத்திலாவது தான் ஒரு பெரியவீரன் ஆகிவிடவேண்டும் என்கின்ற ஆசையைத்தவிர வேறொன்றும் இருப்பதாய் காணமுடியவில்லை. திரு பெசண்டம்மையோவென்றால், அவாது கொள்கையும் கண்டுபிடிக்க முடியாததாயிருப்பதுடன் தனது மட்டும் மடாதிபதித்தன்மையும் இருப்பதாகக் காட்டிக்கொண்டால் போதும் என்கின்ற கவலையே அதிகமாயிருப்பதாக காண்கின்றது. எனவே இந்தக்கூட்டங்கள், அதாவது உலகத்தில் கஷ்டம் என்ன? தொழிலாளர்கள் கூலிக்காரர்கள் நிலைமை என்ன? தாழ்ந்த ஜாதியார் என்பவர்கள் அநுபவிக்கும் துன்பம் என்ன? என்கின்ற விஷயங்களை ஒரு சிறிதும் அறியாதவர்களும் அறிய சந்தர்ப்பமில்லாதவர்களுமான இவர்கள் இந்திய மக்களுக்காகவென்று அபிப்பிராய பேதப்படுவதும் கக்ஷிபிரிந்து நிற்பதும் மறுபடியும் ஒற்றுமைப்படுவதுமான காரியங்களால் ஏதாவது பலன் உண்டாக முடியுமா அல்லது பாமரமக்கள் லக்ஷியம் செய்யக்கூடியதாயிருக்குமா என்று கேட்கின்றோம்.

ஒரு வருஷத்தில் ஒத்துழையாமை.

பிறகு, ஒரு வருஷத்தில் ஒத்துழையாமை ஆரம்பிக்கப்படுமாம். அதாவது சர்க்கார் குடியேற்ற நாட்டு அந்தஸ்து ஒரு வருஷத்தில் கொடுக்காவிட்டால் ஒத்துழையாமை ஆரம்பிக்கப்படுமாம்.

சர்க்கார் ஒரு வருஷத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்து நமக்குக் கொடுக்கப்போவதில்லை என்பது உறுதி. அதில் சிறிதும் சந்தேகமில்லை. ஒருசமயம் சர்க்கார் பகுதி கொடுத்தாலும் ஒன்றும் கொடுக்காவிட்டாலும் வேறு ஏதாவது சில மாறுதல் செய்தாலும் "அதுதான் நாங்கள் குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்று நினைத்துக்கேட்டோம்" என்று சொல்லிக்கொண்டால் கொள்ளலாமே யொழிய உண்மையில் இந்த நிலைமையில் அந்த நிலைமை நமக்கு கொடுக்கப்போவதும் இல்லை அதைப்படைய நம்நாட்டுக்கு இப்போது சக்தியும் இல்லை.

ஆகவே யோக்கியமானமுறையில் நடப்பதாயிருந்தால் அடுத்தவருஷம் அதாவது 1930 ஜனவரி 1-தேதி ஒத்துழையாமை ஆரம்பித்தாகவேண்டும். எனவே திரு காந்தி இத்தீர்மானத்தை பிரேரேபிக்கும்போது உண்மையாகவே ஒத்துழையாமை ஆரம்பிக்கலாம் என்று உறுதி கொண்டு இதை பிரேரேபித்தாரா அல்லது சர்க்காரை மிரட்டவோ அன்றி பாமர மக்களுக்கு ஆசைவார்த்தைகாட்டி ஏமாற்றவோ கருதி இதை பிரேரேபித்தாரா என்பதை ஒவ்வொருவரும் நடுநிலையிலிருந்து கவனித்துப் பார்த்தால் உண்மை விளங்காமல்போகாது.

அன்றியும் அப்படியே ஒருசமயம் ஒத்துழையாமை ஆரம்பிப்பதாகவே வைத்துக் கொண்டால், திரு சத்தியமூர்த்தி, சாப்ரூ, சிந்தாமணி, சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், ராமசாமி அய்யர், பெசண்டு, மாளவியா ஆகியவர்கள் ஒத்துழையாமைக்கு தயாராயிருப்பார்களா?

எனவே காங்கிரசும் ஒற்றுமையும் ஒத்துழையாமையும், எவ்வளவு கேலிக்கூத்தும் நாணயமற்றதும் சூழ்ச்சி நிறைந்ததுமான தன்மைகள் கொண்டதாய் இருக்கின்றது? என்பதை ஞாபகப்படுத்திப்பார்த்தால் நமது நாட்டிற்கு எப்போதாவது விடுதலை உண்டாகுமா என்றுகூட எண்ண இடமில்லாமல் போவதாயிருக்கின்றது.

சைமன் பகிஷ்காரம்.

அடுத்தபடியாக சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப்பற்றி ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. இது, இதுவரை நடந்த பகிஷ்காரங்கள் தோல்வியுற்றதையும், பகிஷ்காரக்கூச்சல் சைமன் கமிஷன் நடவடிக்கைகளை சிறிதும் அசைக்கச் செய்யாமல் போனதோடு பகிஷ்காரத்தால் பலாத்காரங்கள், உயிர்ச்சேதங்கள், முதலியவை ஆங்காங்கு ஏற்பட்டிருப்பதையும், பகிஷ்கார வேஷக்காரர்கள் பாமரமக்களை முன்னணியில தள்ளிவிட்டுவிட்டு தாங்கள் ஒளிந்து கொண்டும் பின்னணியில் நின்று கொண்டும் பொதுமக்களை ஏமாற்றிய பயங்காளித்தனமான இழி தன்மைகளையும் காட்டவில்லையா? திரு காந்தியும் காங்கிரசும் இவைகளை நன்றாய்த் தெரிந்து கொண்ட பிறகும் இம்மாதிரியான ஒரு ஏமாற்றுத் தீர்மானத்தை தீர்மானித்ததானது, இந்தியாவில் நடைபெறும் தேசிய அயோக்கியத்தனத்தை வெளிப்படுத்தத்தக்க சான்றாகவில்லையா?

பகிஷ்காரத்தைப் பற்றிப் பேசும்போது "இங்கிலாந்து முதலிய தேசங்களில் இம்மாதிரியோது மக்களால் வெறுக்கப்பட்ட ஒரு கமிஷன் இவ்வளவு கட்டாயத்துடனும்செல்வாக்குடனும் நடைபெறுமா" என்று சொல்லப்பட்டது.

இங்கிலாந்து முதலான மற்றும் அநேக இடங்களில் இம்மாதிரியான அக்கிரமம் நடவாது என்பது உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். ஆனால் இந்தியாதவிர மற்ற இடங்களில் இம்மாதிரி கீழ் ஜாதி மேல்ஜாதி வித்தியாசமும், கீழ்ஜாதிக்காரரின் மீதுமேல் ஜாதிக்காரர் என்பவர்கள் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதற்காக சூழ்ச்சிகளும் நடைபெறுகின்றதா? நடைபெற பாமரமக்

கள் விட்டுக் கொண்டிருப்பார்களா என்று கேட்கின்றோம்.

இந்தியா பாரதீனப்பட்டதற்கு முக்கியமான காரணம் என்ன? இந்திய மக்களிலேயே ஒருவருக்கொருவர் கீழ் ஜாதி மேல் ஜாதி என்கின்றதான ஒரு அக்கிரமமான கொள்கையாலல்லவா? எனவே அதை ஒழிக்காமல் 'இந்தியா பூரண சுயேச்சை அடையப்பாடுபடுகின்றேன்' என்பதும் பாடுபடுவதும் காரியத்தில் ஆகக்கூடிய காரியமா? அன்றியும் அது புத்திசாலித்தனமான காரியமா?

ஒரு நாடோ ஒரு சமூகமோ மாத்திரமல்லாமல் ஒவ்வொரு தனி வகுப்பும் ஒவ்வொரு தனிமக்களும் பூரணசுயேச்சை அடையவேண்டும் என்பது தான் நமது கருத்தாகும். ஏனென்றால் அதுதான் மனிதவர்க்கத்தின் பிறப்புரிமையாகிய சுயமரியாதை என்று நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம். ஏனெனில் மானத்தோடு வாழக்கூடியதான அடிமைத் தனத்தைப்பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலையில்லை என்பதோடு மானமற்றதாயிருக்கும்படியான பூரண சுதந்திரமானாலும் அதை நாம் சிறிதும் லக்ஷியம் செய்யமாட்டோம். இக்கருத்தையே முன் ஒரு சமயத்தில், அதாவது கிலாபத் அநீதிகளுக்காக என்றுஒத்துழையாமையை திரு.காந்தி மக்களிடையில் உபதேசித்த காலத்தில், சில சென்னைத் தலைவர்கள் "ஒத்துழையாமையின் லக்ஷியம் சுயராஜ்யம்" என்று குறிப்பிடவேண்டும் என்றுசொன்னபோது திரு.காந்தி "பஞ்சாப் அநீதிக்குப் பரிகாரம் கிடைக்காமல் எவ்வித சுயராஜ்யம் வருவதானாலும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்; ஏனெனில் மானம் என்னும் சுயமரியாதை பெரியதே ஒழிய சுயராஜ்யம் பெரியதல்ல" என்று பிராட்வே 8 நெம்பர் கட்டடத்தில் சொன்னார். சென்னை அய்யர் பார்ப்பனர்கள் தவிர மற்றப்படி அது சமயம் அங்குள்ளவர்கள் எல்லோரும் கைகட்டினார்கள். எனவே பூரண சுயேச்சை விரும்புகின்றவர்களாகட்டும், குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கு குறைந்த எதையும் ஒப்புக்கொள்ளாதவர்களாகட்டும், சைமன் பகிஷ்கார கூப்பாட்டுக்காரர்களாகட்டும், இதுவரையில் மனிதனின் பிறப்புரிமையாகிய சுயமரியாதைக்காக என்ன ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள் என்று கேட்கின்றோம். பொதுவாகவே சைமன் கமிஷன் நாளை கப்பலிலேயே திரும்பிப் போய்விட்டதாகவோ இந்தியாவுக்கு நாளையத்தினமே குடியேற்ற அந்தஸ்து வந்து விட்டதாகவோ அல்லது பூரண சுதந்திரம் வந்துவிட்டதாகவோ அதாவது வெள்ளைக்கார ஆதிக்கம் மாத்திரமல்லாமல் அந்த சமூகமே இந்தியாவை விட்டு ஒரே அடியாய் ஓடிப்போனதாகவோ வைத்துக்கொள்ளுவோமானால், இந்திய மக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன? அவற்றால் இப்போதைய நிலைமையைவிட வேறு எந்தவித மாறுதல்கள் உண்டாக்கக்கூடும்? என்பதை சற்று யோசிப்போம்.

இந்திய மக்களில் 100 க்கு 90 பேர்களைப் பொருத்தவரை அவர்கள் அனுபவிக்கும் இழிவுக்கு-அடிமை நிலைக்கு சுயமரியாதையற்ற தன்மைக்கு- வெள்ளைக்காரர்களுடைய ஆட்சி காரணமா அல்லது உள் நாட்டு ஆரியப் பார்ப்பனீயமும் அதன் ஆதிக்கமும் காரணமா என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப்பார்க்கட்டும். அன்றியும் எந்த விதத்திலாவது வெள்ளைக்கார ஆட்சியே தான் நம்மைப்பிரித்து வைத்திருக்கின்றதென்பதை நடுநிலையில் இருந்து யோசித்துப் பார்க்கட்டும். அப்போது என்ன பதில் கிடைக்கும் என்பதை நாம் சொல்லவேண்டுமா? ஆனால் நமக்குள் ஏற்பட்ட பிளவை வெள்ளைக்காரர்கள் தங்கள் கொடுங்கோன்மை ஆட்சிக்கு அனுகூலமாக உபயோகித்துக் கொள்ளுகின்றார்கள் என்பதை நாம் சிறிதும் ஆக்ஷேபிப்பதில்லை. ஆனால் அதற்கு வெள்ளைக்காரர்களே முழு ஜவாப்தாரிகளாவார்களா? ஏனெனில் நாம் அந்த நிலையில் இருந்தால் வேறு என்ன செய்வோம். அதைத்தான் செய்வோம். சைமன் கமிஷன் பகிஷ்காரத்திற்காக செலவழித்த தந்திரமும் நேரமும் கஷ்டமும் நஷ்டமும் மக்களின் உண்மையின் ஒற்றுமைக்கும் சமத்துவத்திற்கும் பரஸ்பர நம்பிக்கைக்கும் செலவிட்டிருந்தால் சைமன் கமிஷனுக்கு நமது நாட்டில் வேலை இருந்திருக்குமா? அவர்கள் திரும்பிப் பார்க்க ஆள்கள் தான் இருந்திருக்குமா?

மக்களின் ஒற்றுமையிலும் சமத்துவத்திலும் பரஸ்பர நம்பிக்கையிலும் சற்றும் கவலையில்லாது மூன்று வருஷத்திற்கு முன்பிருந்தே "சைமன் கமிஷன் வரப்போகிறது, வரப்போகின்றது, உண்மையான இந்திய தேசியவாதிகள் அதில் சாட்சி சொல்லவேண்டும்; ஆதலால் ஓட்டர்களே நீங்கள் தக்க தேசியவாதிகளைத் தெரிந்தெடுங்கள்" என்று ஓட்டுப்பிச்சை பிரசாரம் செய்துவிட்டு ஓட்டர்களும் தங்கள் பிரதிநிதிகள் சைமன் கமிஷனிடம் சாட்சி சொல்லவேண்டும் என்கின்ற எண்ணத்தின் பேரிலேயே தங்கள் ஓட்டுகளைக் கொடுத்து தெரிந்தெடுத்திருக்க, இப்போது தங்களைத் தெரிந்தெடுத்த ஓட்டர்களுக்கு விரோதமாய் 'சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கின்றேன்' என்பது ஒரு யோக்கியமான பிரதிநிதிக்கு நாணயமான காரியமாகுமா? பிரதிநிதிகள் அயோக்கியராக இல்லாமல், ஓட்டர்களின் துரோகியாக இல்லாமல், நல்ல சுத்தமாக ஒட்டமுள்ள நாணயக்காரராயிருப்பார்களானால், உடனே தமது பதவியை ராஜீனாமா கொடுத்து விட்டு மறுபடியும் தேர்தலுக்கு நின்று, தாம் பகிஷ்காரம் செய்யப்போவதாய் ஓட்டர்களுக்கு சொல்லி ஓட்டு கேட்டு, அவர்களால் தெரிந்தெடுத்த பிறகு பகிஷ்காரம் செய்தால், அது ஆண்மையும் நாணயமுமான காரியமாகும். அப்படிக்கில்லாமல் 'காணாமல் பேசுபவர்கள் எதற்கோ சமானம்' என்பதுபோல் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் போய் நின்றுகொண்டு உண்மையான விஷயங்களைச் சொல்லாமல் தமிழ் மக்கள் மீது வீண்பழி சுமத்துவதில் என்னலாபம் வரும்? எனவே வீணான பகிஷ்காரக்கூச்சல் போடுவதும் கமிஷனை பகிஷ்கரிப்பதும் இந்திய தேசிய அயோக்கியத்தனத்திற்கு மற்றொரு உதாரணமாகும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

### கதர்.

கதரைப்பற்றியும் ஒரு தீர்மானம் காங்கிரசில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. இது ஓட்டுப் பறிக்கும் தந்திரமே ஒழிய இதனால் நாட்டிற்கு எவ்வித பலனும் உண்டாகப்போவது இல்லை என்று துணிந்து சொல்லுவோம்.

காங்கிரஸ் தீர்மானத்தில் கதர் இல்லாமலிருக்கும் போதே கதரின் பெயரைச் சொல்லிக் கொண்டு பார்ப்பனர்களில் ஒரு பகுதியார் வயிறுவளர்ப்பதோடுமாத்திரம் நில்லாமல் பார்ப்பனரல்லாதாருக்கு பல வழிகளிலும் தொல்லைகள் விளைவித்துக்கொண்டு வருகின்றார்கள் என்பதைப்பற்றி பல தடவை வெளிப்படுத்தி இருக்கின்றோம். இப்போது காங்கிரசில் தீர்மானிக்கப்பட்டு விட்டதால் இனி முன்னிலும் அதிகமாக வெறும் ஆகாசப் பேர்வழிகளெல்லாம் வெளியே கிளம்பி கதர்! கதர்! என்று கூச்சல் போட ஆரம்பித்து விடுவார்கள்.

ஆகவே, கதரின் யோக்கியதையைப் பற்றி இந்தச் சமயத்திலேயே சற்று வெளிப்படுத்தி விடுவது சரியான காரியமாகும்.

அதாவது கதர் இயக்கம் ஏற்பட்டு நமக்குத் தெரிய சுமார் 8 வருஷமாகின்றது. அதில் இதுவரையில் எத்தனை லக்ஷ ரூபாய்க்கு அல்லது எத்தனை கோடி ரூபாக்கு கதர் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றதோ அதில் சரியாக மூன்றில் இரண்டு பங்கு ரூபாய் அதை வாங்கிக் கட்டிய மக்கள் நஷ்டப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அவற்றில் 5-ல் ஒரு பங்கோ 6-ல் ஒரு பங்கோ தான் ஏழைகளான நூற்புக்காரர்களுக்குச் சேர்ந்திருக்கும். நெசவுக்காரர்களுக்கு இந்த கதரினால் எவ்வித லாபமும் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லிவிட முடியாது. நூல் நூற்பவர்களுக்கு மேற் சொன்னபடி சிறிது பாகம் சேர்ந்திருந்தாலும் அது அவர்களுக்கு தினம் ஒன்றுக்கு 10-மணி அல்லது சில சமயங்களில் 12-மணி நேரத்திற்கும் குறையாமல் வேலை செய்வதற்கு 6 தம்பிடி முதல் 9 தம்பிடி அல்லது (ரொம்பவும் அதிகமாயிருந்தால்) 10 தம்பிடி வீதம் தான் பெரும்பாலும் கிடைத்திருக்கும். ஒரு அணாவுக்கு மேல் அடைந்திருக்கவே முடியாது.

அதாவது ஆறுமுழமுள்ள ஒரு ஜதை கதர் வேஷ்டி சாதாரணபஜாரராக மானால் ரூ. 4—2—0 கொடுத்து வாங்கவேணடும். இதே ஆறுமுழ வேஷ்டியை மில்வேஷ்டியாக வாங்கினால் ரூ 1-10-0 அல்லது ரூ 1-12-0 கொடுத்தால் போதுமானது. ஒருஜதை வேஷ்டிக்கு கதரை உத்தேசித்து வாங்குகிறவர்கள் குறைந்தது 2-4-0 அல்லது 2-8-0 ரூபாய் நஷ்டப்படவேண்டியிருக்கிறது. சற்று நல்ல வேஷ்டியாய்ப்பார்த்து வாங்க ஆசைப்படுகின்றவர்கள் சில சமயங்களில் இதற்கு இரட்டிப்பாயும் கொடுக்கவேண்டி வருகின்றது. பொதுமக்கள் இவ்வளவு நஷ்டமடைந்த பணத்தில் நூற்பவர்களுக்குப் போய்ச்சேரும் பணம் எவ்வளவுஎன்று பார்ப்போமானால் சற்று விவரமாய கூறுவோம்.

அதாவது இந்தவேஷ்டி, எடைபோட்டுப் பார்த்தால் இரண்டேகாலே அரைக்கால் பவுன் எடையாயிருக்கும். இந்த பஞ்சுக்கு நூற்பவர்களுக்குகூலி ராத்தலுக்கு 4-அணா

கூலிவீதம் சராசரி 0-9-6 அணாதான் போய்ச்சேரக்கூடும். அதுவும் ஒருவாரத்திற்கு ஒருபெண் இரவும்பகலும் வேலை செய்தால் தான் மேல்கண்ட இரண்டேகாலே அரைக்கால் ரூத்தல் நூலை நூற்று மேல்கண்ட ஒன்பதரையணா கூலி பெறமுடியும். இதற்கு ஒவ்வொரு பெண்மணியும் சராசரி 3 மைல் முதல் 6 மைல் வரை நடந்துவந்து பஞ்சு வாங்கிக்கொண்டுபோய் நடந்துவந்து நூலைக்கொடுத்து கூலி வாங்கிக்கொண்டு போகவேண்டும்.

சதாரணமாய் 8வருஷகாலமாய் பல லக்ஷ ரூபாய்கள் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்து பிரசாரஞ்செய்து ஆராய்ச்சிசெய்த கதர் இயக்கத்தின் யோக்கியதை இதுவானால் இதை இனியும்எத்தனைவருஷகாலம் பிரசாரஞ்செய்வது? இனிஎத்தனைலக்ஷரூபாய்பொது மக்களிடமிருந்து பிடுங்குவது? இனி எத்தனை லக்ஷமக்கள் இம்மாதிரி 100க்கு 200-வீதம் சதாவரி கொடுத்து சதா வாங்கிக் கட்டிக்கொண்டுவருவது என்பனவைகளை யோசித்தால் கதர் இயக்கம் ஜீவகாருண்யமும் புத்திசாலித்தனமானதும் என்றுயாராவது சொல்லமுடியுமா என்றுகேட்கின்றோம். உலகம் புதிய முறைகளையும் புதிய ஆராய்ச்சிகளையும் கண்டு பிடித்து அதனாலே மேன்மை அடைந்து வருகின்றது. தினத்திற்கு தினம் புதுமை புதுமையான சக்திகள்கண்டுபிடிக்கப்பட்டு உலகம் சுகமும் நாகரீகமும் அடைந்து வருகிறகாலத்தில் நமதுநாடும் அப்பதவியை அடைய ஏன் முயற்சிக்கக்கூடாது. இப்படி பொது மக்களிடம் கோடிக்கணக்காய்பணம் வசூலித்து அவை முழுவதும் ஒரு கூட்டத்தார் வயிற்றில் போய் விழும்படி-அதுவும் பணம் கொடுத்த கூட்டத்தாருக்கு துரோகம் செய்யச் செய்துகொண்டு-ஒரு நாளைக்கு 10 மணி 12 மணி நேரம வேலை வாங்குவதன்மூலம் முக்கால் அணாவும் ஒரு அணாவும் கூலி கிடைக்கும்படியான வேலைகளை ஆதரித்துக்கொண்டு-வருவது ஒரு நாளும் இனி பொறுத்துக் கொண்டிருக்கக்கூடிய காரியமல்ல என்பதோடு அவ்வியக்கம் ஒரு பெரிய சமூகத்திற்கு கொலை செய்யக்கருவியாயிருக்க விட்டுக்கொண்டிருப்பதும் அதற்காகத்தொல்லைப்படும மக்களை 100-க்கு 200 வீதம் வரிகொடுத்து வாவும் சகித்துக்கொண்டிருப்பது என்பதும் இனி அரை க்ஷணமும் பொறுத்துக்கொண்டிருக்க கூடியதல்லவென்றே சொல்லுவோம்.

ஆகலால இனி பொது மக்கள் கதரில் செலுத்தும் நேரத்தையும் பணத்தையும் அறிவையும பிரயாசையையும் அதற்காகச் செலுத்தும வரியையும வேறு ஏதாவது ஒரு நகக ஆராய்ச்சியில் செலவு செய்து ஏழைகளுக்கு விமோசனம் உண்டாகும்படி செய்யவேண்டியது மிகவும் முக்கியமான காரியமாகும்.

அன்றியும் பாமர மக்கள் இக்கதர்ப் புரட்டிலேயே ஏமாந்து போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதும பொது மக்களின் கடமையாகும். இதனாலேயே நாம் கதரைக் கட்டாமலிருக்க போகின்றோம் என்றாவது மற்றவர்களை கட்டவேண்டாம் என்றுசொல்வதாகவாவது யாரும் நினைத்துவிடக் கூடாது. இந்த முயற்சி பலனளிக்கவில்லை என்றும் சூழ்ச்சிக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது என்றும் செல்லுவதுடன் இதையே நம்பிக்கொண்டிருக்காமல்ஏழை மக்களின்பொருட்டுவேறு முயற்சி கண்டு பிடிக்கவேண்டும்என்றும் பொது ஜனங்களுக்கு தெரிவிக்கவும் இந்த எட்டு வருஷகாலம் கதருக்காக பாடுபட்டு கதருக்காக ஜெயிலுக்குப் போய் கஷ்ட நஷ்டப்பட்டு கதர் இயக்கத்திற்கு ஓரளவு பொறுப்பாளியாய் இருந்து வந்ததின் மூலம் அறிந்த அனுபவத்தையுமே நாம் எழுதுகின்றோம். இப்போது ஏன் இதை எழுதவேண்டியதாயிற்று என்றால் வர வர கதர் புரட்டு சகிக்கக்கூடியதாயில்லை என்பதோடு தமிழ் நாடு கதர் இலாக்காகாரர்களான திரு. சி. ராஜகோபாலச்சாரியாரும் அவர்களது சிஷ்யர்களும் அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார்களை ஒழிக்க இக்கதர் புரட்டையே முக்கிய கருவியாய் கருதி இருக்கின்றார்கள் என்றும் அதை உத்தேசித்தே காங்கிரசில் கதர் தீர்மானம்நிறைவேற்றி இருக்கின்றார்கள் என்றும் உறுதியாய் நம்புவதால்தான்.

உதாரணமாக சென்ற தேர்தலில் பார்ப்பனரல்லாதாரை ஒழிக்க மதுவிலக்குப் புரட்டுகளை ஆயுதமாக வைத்துக்கொண்டு இதே திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் அவரது சிஷ்யகோடிகளும் பிரசாரம் செய்ததையும் கோடுகட்டிய குறள்கள் எழுதினதையும் கருப்பாயி சொக்காயி சம்பாஷணைகள் எழுதினதையும் இவற்றை எல்லாம் இதே திரு காந்தியும் ஆமோதித்து மதுவிலக்கு காரருக்கே ஓட்டுகொடுக்கும்படி சிபார்சு செய்ததையும் ஞாபகப்படுத்திக்கொண்டால் போதுமானது. எலக்ஷன் நடந்த பிறகு இந்த திரு. காந்தியாவது திரு. ஆச்சாரியாராவது ஒரு கடுகளவாவது தங்கள் பொறுப்புகளை உணர்ந்தார்களா என்று கேட்கின்றோம்.

---


## செல்வராஜ் & கோ., காலண்டர்.

தலைவர்களின்படங்களடங்கியது.

30 x 20 அங்குல அளவில் நல்ல தடித்த வழுவழுப்பான ஆர்ட்பேப்பரில் திருவாளர்கள் டாக்டர் நாயர், தியாகராயர், பனகால் அரசர், ராமசாமி நாயக்கர், பி. டி. ராஜன், எ. ராமசாமி முதலியார், எம். கே. ரெட்டியார், குமாரசாமி ரெட்டியார், பன்னீர் செல்வம், சௌந்தரபாண்டிய நாடார், கண்ணப்பர், கே. வி. மேனன், சுரேந்திரநாத் ஆரியா, சின்னையா பிள்ளை ஆகிய பதினாங்கு தலைவர்களின் திருவுருப்படங்களுடன் கூடியது. காலண்டர் 1-க்கு விலை அணா 8 தான். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். விலாசம்:—

செல்வராஜ் & Co.,
சைக்கிள் வியாபாரிகள்,
ஈரோடு


---

# சந்தேகம்.

## பார்ப்பனரல்லாதார் இயக்கம்,

1. தங்களை பார்ப்பனர்களில் சேர்ந்தவர்கள் என்றும் தங்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் ஆச்சார அனுஷ்டானங்களில் எவ்வித வித்தியாசமுமில்லை என்றும் தங்களுக்கும் பார்ப்பன உரிமை உண்டென்றும் கருதிக்கொண்டு இருப்பவர்களுக்கும், பார்ப்பன மதத்தையும் வேதத்தையும் புராணத்தையும் பார்ப்பன தெய்வங்களையும் காப்பாற்ற முயலுகின்றவர்களுக்கும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் இடமோ அல்லது தான் பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் ஏதாவது உரிமைபெற அருகதையோ உண்டா?

2. யாராவது ஒருவர் தன்னை மற்றவர்களை விட உயர்ந்த ஜாதி என்றோ அல்லது க்ஷத்திரியனென்றோ வைசியனென்றோ சூத்திரனென்றோ பஞ்சமனென்றோ சொல்லிக்கொண்டு தன்னுடைய தனி ஜாதிக்கென்று தனி சின்னமோ ஆச்சார அனுஷ்டானமோ உண்டு என்று சொல்லிக்கொள்பவனுக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் இடமோ பார்ப்பனர்களிடமிருந்து கைப்பற்றும் உரிமைகளில் பங்கு பெற பாத்தியமோ உண்டா?

3. பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பது பார்ப்பனீயத்தை நீக்கிய இயக்கமா? அல்லது பார்ப்பனர்களை நீக்கிய இயக்கமா?

4. பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றால் பார்ப்பனர்களிடம் உள்ள உத்தியோகத்தையும் பதவியையும் மாத்திரம் கைப்பற்றுவது என்ற கருத்தை உடையதா? அல்லது பார்ப்பனீயத்தை ஒழிக்கவேண்டு மென்ற கருத்தை உடையதா?

5. பார்ப்பனீயத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு தான் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை குலைத்தாலும், பார்ப்பனீயமானது பார்ப்பனர்களை உண்டுபண்ணிக்கொண்டும் பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டும் இருக்காதா?

6. பணக்கார ஆதிக்கம் கூடாது என்பதாகக் கருதிக்கொண்டு நாம் எவ்வளவு தான் எல்லோருடைய சொத்துக்களையும் பிடுங்கி எல்லா மக்களுக்கும் சரிசமமாய்பங்கிட்டுக் கொடுத்தாலும் மறுபடியும் யாரையும் சொத்து சேர்க்காமல் பார்த்துக்கொள்ளத்தக்க ஏற்பாடு செய்யாவிட்டால் எப்படி மறுபடியும் பணக்கார ஆதிக்கம் உண்டாய்விடுமோ அதுபோலவே பார்ப்பனனிடமிருக்கும் உத்தியோகத்தையும் பதவியையும் அடியோடு கைப்பற்றி எல்லோருக்கும் சரிசமமாய்ப்பங்கிட்டு கொடுத்து விட்டு பார்ப்பனீயத்தில் ஒரு கடுகளவு மீதி வைத்திருந்தாலும் மறுபடியும் பார்ப்பன ஆதிக்கம் வெகு சீக்கிரத்தில் வளர்ந்து விடுமல்லவா?

7. பார்ப்பனரல்லாதார்இயக்கம் பார்ப்பனீயத்தை ஒழிப்பதற்கு இடையூறாய் இருக்குமானால் அது உடனே ஒழிந்துபோக வேண்டாமா? ஏனெனில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் இல்லாவிட்டால் பார்ப்பன ஆதிக்கம் ஒன்றுமாத்திரந்தான் இருந்துவரும் என்றும் பார்ப்பனீயத்தை ஒழிக்கும கொள்கைஇல்லாத பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் வேறுபல ஆதிக்கங்களும் ஏற்பட இடமுண்டாகும் என்றும்சொல்வது சரியா தப்பா? உதாரணமாக பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பலனால் ஏற்கனவேஉள்ள பார்ப்பனாதிக்கத்தோடு இப்போது ஜமீன்தார் ஆதிக்கம், பணக்கார ஆதிக்கம், ஆங்கிலம் படித்தவர்கள் ஆதிக்கம், முதலியனபார்ப்பன ஆதிக்கத்தைப்போல் மக்களை வாட்டிவருகின்றது என்று சொல்லுவதற்கு ஆதாரம் இருக்கின்றதா இல்லையா?

## நமது நாடு.

உலகமெல்லாம் சமூக சீர்திருத்தமும், அபேதவாதமும், சமதர்மமும், சமசொத்துரிமையுமான துறைகளில் தீவிரமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் போது நமது நாட்டில் வருணாச்சிரம தர்ம மகாநாடுகள் நடந்துகொண்டிருக்கிறது.

உலகமெல்லாம் சந்திரமண்டலத்துக்கு போய்வரவும், ஆகாயத்தில் பறக்கவும், மணிக்கு 100, 200, 300, மைல் வேகம் போகவும், பேசும் யந்திரங்களை உண்டாக்கவும், மழையை வருவிக்கவும், ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும், செத்தவனைப் பிழைக்கவைக்கவும், ஐயாயிரம் பத்தாயிரம் மைலுக்கப்பால் நடப்பதையும் பேசுவதையும் காணவும் கேட்கவும் செய்யவும் மற்றும் இதுபோன்ற அற்புதங்களிலும் ஆராய்ச்சிகளிலும் புத்தி செலுத்திக்கொண்டிருக்கும்போது நமது நாட்டில் "இந்தக்குளத்தில் "பறையன்" தண்ணீர் மொள்ளலாமா? இந்தக்கோவிலுக்குள் நாடார் போகலாமா? இந்தப்பள்ளிக்கூடத்தில் நாயக்கர் படிக்கலாமா" என்கின்ற விவாதமும் "சூரியனுக்கு 8 குதிரையா 16 குதிரையா? தீபாவளிபுரட்டாசிமாதத்திலா அற்பிசிமாதத்திலா? சாமிக்கு நெற்றியில் நாமம் வடகலையா தென்கலையா? விபூதியை குழைத்துப்பூசுவதா அப்படியே அடித்துக்கொள்ளுவதா? சீதையை ராவணன் தலைமயிரைப்பிடித்து தூக்கிக்கொண்டுபோனானா தரையோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு போனானா? சுவாமிக்கு தாசிவேண்டுமா வேண்டாமா? பெண்களை 12வயதில் படுக்கைவீடு கூட்டலாமா 16-வயதில் கூட்டலாமா? எந்தப்புராணம் நிஜமானபுராணம் எந்தப்புராணம் பொய்யானபுராணம்? எந்தப்பாட்டு பழயபாட்டு எந்தப்பாட்டு இடைச்செருகல்? சமணர்களைகழுவேற்றினதற்கு அகச்சான்று புறச்சான்று இருக்கின்றதா" என்கின்ற ஆராய்ச்சியே மிகவும் முக்கியமான ஆராய்ச்சியாகக் கருதப்படுவதோடு இன்னமும் முடிவுபெற்றதாகவும் தெரியவில்லை.

### தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு.

ஈரோட்டில் 1929-ளு ஜனவரி மாதம் 19, 20-ம் தேதிகளில் நடைபெறும்.

இம்மகாநாட்டிற்கு ஜெனரல் காரியதரிசியாக பிரபல நூல் வியாபாரியும் தாலூகா, டிஸ்டிரிக்ட் போர்டு அங்கத்தினருமான திரு வி. வி சி வி. நடேச முதலியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார் மகாநாட்டின் தொண்டர் படைத்தலைவராக திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ. எல். டி. அவர்களும் பொக்கிஷதாரராக திரு. எஸ். ராமசாமி முதலியார் அவர்களும் திரு. வி. வி. சி வி. பெரியசாமி முதலியார் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சமூகமகாநாட்டிற்கு தலைமைவகிக்க புதுவை செகரட்டேரியேட் ஜனரல் திரு வ. வீ. முத்தையா முதலியார் பி. ஏ. பி எல். அவர்களும், வர்த்தக மகாநாட்டிற்கு தென்காசி பாங்கர் டி. பி. கே. ஆறுமுக முதலியார் அவர்களும், வாலிபர் மகாநாட்டிற்கு குடியாத்தம் மாஜி சேர்மென் பிமாஜ முதலியார் அவர்களும் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

பொருட்காட்சி சபையை திறந்துவைக்க "குடி அரசு" பத்திராதிபர் உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும், கொடியேற்று விழாவை நடத்த காஞ்சீபுரம் மாஜி சேர்மென் ம. சாமிநாத முதலியார் அவர்களும் சம்மதித்துள்ளார்கள்.

மகாநாட்டு பந்தல் வேலைகளும் நடந்து வருகிறது. பதினாயிரக்கணக்கான ஜனங்கள், வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

வி. வி. சி. வி. நடேச முதலியார்,
காரியதரிசி.

## காருண்ய கவர்ன்மெண்டாருக்கு பள்ளியபாளைய வாசிகளின் விண்ணப்பம்.

சேலம் ஜில்லா திருச்செங்கோடு தாலூகா பள்ளியபாளையம் வாசிகளாகிய எங்கள் விண்ணப்பத்தை காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களே கவனிக்கவில்லையேல் எங்களின் துயரத்தையாவர் ஆற்றுவரென அறிகிலோம். எங்கள் தலைமைநகர்சென்று ஸ்தல அதிகாரிகளிடம் எங்களின் ஆற்றொணாத்துயரத்தை உரைத்து எங்கள் குறை நீங்கி வாழலாமென்றாலோ பாட்டையை நோக்குங்கால் பயமாயிருக்கின்றது. பன்முறை தாலூகா போர்டார் அவர்களிடம் பணிவுடன் குறை கூறியும் எழுத்து மூலம் பல மனுக்கள் அனுப்பியும் அம் மகான்களின் மனமிளகாத காரணம் இன்னதென்று அறிகிலோம்.

அதிகாரம் பதவி அடைய விரும்பும் ஒவ்வொரு போர்டு மெம்பர்களும் அவரவர்களின் சொந்தநலத்திற்காக இங்குவந்து "நான் பூனையை யானை பண்ணுவேன், கழுதையை குதிரை பண்ணுவேன்" என்று கபட வார்த்தையாடி வோட்டுபெற்று தங்கள் காரியம் அனுகூலமானதும் மாறிவிடுகிறார்கள். இத்தகையவர்கள் இருக்குமட்டும் ரயில்வே ரோட்டிலோ குமாரபாளையம் ரோட்டிலோ திருச்செங்கோடு ரோட்டிலோ சங்ககிரி ரோட்டிலோ எந்த வண்டியும் விழாமல் குறித்த இடம் போய்ச்சேராது. எதிர் வண்டி வந்தாலும் ஒதுங்கவும் இடமில்லை. இத்தகைய நிலையில் இடிப்பள்ளகுழிகள் இருக்கும் பாட்டையில் நாங்கள் நித்யகண்டத்தோடு உலவித்திரிகிறோம்.

நிற்க ஓர் பார்ப்பன குசல பிரதாப தபால் அதிகாரியின் குறும்பு சகிக்கொணாததாயிருக்கிறது. பணமென்றால் பாராட்டுவார். இல்லையேல் பாயும்புலிபோல் சீறுவதுடன் மணியார்டரோ ரிஜிஸ்டரோ செய்யப்போனால் "டயம் ஆய்விட்ட"தென்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் போஸ்ட்டு ஆபீஸ் திறக்கவும் மூடவும் குறித்த காலம் உண்டு. ஆனால் நம்ம ஊரிலோ அய்யர் இட்டதே சட்டம். இது விஷயமாக மேல் அதிகாரிகளுக்கு எழுதியும் அம்மேலதிகாரிகளும் கவனிக்கவில்லை. இப்பார்ப்பன மாஸ்டர்கள் இவ்வூர் வியாபாரிகளின் அந்தரங்க விஷயங்கள் அனைத்தும் அதிநுட்பமாக அறிந்து ஒரு வியாபாரியின் விஷயத்தை இன்னொரு வியாபாரிக்கு தெரிவித்துவிடுகிறார்கள். காருண்யம் பொருந்திய கவர்ன்மெண்டாரே எங்கள் குறையைக் கேட்டு மனமிறங்கமாட்டீர்களா?

இப்படிக்கு,
பள்ளியபாளையம் வாசிகள்.

(6ம் பக்கத் தொடர்ச்சி.)

பால் ஜாதிவித்தியாசம் கற்பிக்கப்பட்டிருப்பது பார்ப்பானின் பெரும் சூழ்ச்சியேயாகும், தொழில் வேற்றுமையாலேயேதான் அவனவனது வகுப்பு உணர்த்தப்பட்டிருக்கிறது. புலாலுண்ணுபவன்புலையன். செட்டாகவாழ்பவன் செட்டி, பறையடிப்பவன் பறையன், பிர்மத்தை யுணர்ந்தவன் பிராமணன் இப்படி யிருக்க இண்டிமாமா வேலைபார்க்கும் பார்ப்பான்பிராமணன் ஆவானா? ஆகையால், இப்பொழுதுதயாராகும் அகராதியில் அந்தப்பதத்தைஎடுத்துவிட்டு, பார்ப்பான்என்றால் இண்டிமாமா என்று எழுத வேண்டும். இதற்கு சட்டசபை அங்கத்தினர்கள் தீர்மானம் கொண்டுவருவார்களென நம்புகிறேன். அதோடு மூடச்சடங்குகளையும் ஒழிக்கவேண்டுமென்ற தீர்மானங்களையும் கொண்டுவர வேண்டும். நான் சென்றசில ஆண்டுகளாக நெற்றியில் விபூதி தரிப்பதில்லை. அக்காலத்தில் ஜலத்தில் குளித்துத்திரும்பிய பின்நெற்றியில் ஜலம் தங்கினால், மையை உறிஞ்ச பிளாட்டிங் பேப்பர் உபயோகிப்பதுபோன்று சாம்பலுக்கும் தண்ணீரை உறிஞ்சும் சக்தியிருப்பதால் அதை நெற்றியிலிட்டார்கள். ஆனால், இப்பொழுதோ அம்மாதிரி ஜலம் தங்கி ஜலதோஷம் ஏற்பட்டால் யூக்லிப்டஸ் ஆயில்போன்ற மருந்துகள் இருக்கும்போது ஏன் விபூதியை உபயோகித்து அசங்கியப்படுத்திக்கொள்ள வேண்டும்? கோவில்களிலோ வைத்துள்ளபிரகாரங்கள் அதைச்சுற்றி நன்றாகநடந்து தேகாப்பியாசம் செய்வதற்காக ஏற்பட்டது. தற்காலமோ டென்னிஸ், புட்பால், ஹாக்கி, பார்களிருக்கும்போது ஏன் அந்த சிறு தேகாப்பியாசம் வேண்டுமென்பதை யோசியுங்கள் ஆனால் மேற்கூறியவைகள் நமது பகுத்தறிவைமழுங்கச்செய்வதைத்தவிர நம்மை முன்னேற வைப்பதில்லை. இத்தகைய மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிந்து, மக்களுக்குள் சமத்துவமேற்பட்டு நிலவி, அன்புமேலிட்டு ஏழைகள் குறைகள் கவனிக்கப்பட்டு வரும் நமது நாயக்கரின் புனித இயக்கத்தை நீங்கள் பின்பற்றினால் மோட்சம் என்பது ஒன்றிருக்குமானால் அதை நீங்கள் அடைந்தவர்களாவீர்கள். ஆனால், என்னைப்பொறுத்தமட்டில் [illegible] தாக்களும் சுற்றத்தாரும்நாஸ்திகன் [illegible] சொல்லியும் கெட்டுப்போய் [illegible] னென்பதாகவும் கூறுகிறார்கள் [illegible] ணிக்கம்போன்று முன்னறு குழந்தைகளிருக்கின்றன. பெண் குழந்தைக்கு [illegible] நண்பர் படிப்புச்செலவிக்கொடுக்கிறார். அதற்கு நன்றாய் படிப்புவருகின்றது இதனால் என்னை நாஸ்திகன் என்கிறார்கள் [illegible] வோரான் ஒரு நாஸ்திகன்தான். எனது சிறிய சொற்பெருக்குக்கு அனுமதிகொடுத்த தலைவரவர்கட்கும் உங்களனைவருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச்செலுத்தி அமருகிறேன்.

# கீதையின் தத்துவம்.

பட்டுக்கோட்டை திரு. தண்டபாணி செட்டியார் எழுதுவது.

கட்டுரை நெ. 1

முன்னுரை

இந்துமத சம்பந்தமான நூல்களுள் கீதை மிகஉயர்ந்த தத்துவ நூல்என்பதாகக்கருதப்படுவதுடன் அதை மகத்தான பெருமை வாய்ந்த தெய்வீக நூல் என்பதாக நினைத்து அநேகர் போற்றி வருகின்றனர். இந்தியாவின் தத்துவக் கலைக்கு இந்த கீதைஉயிர் போன்றது என்பதாகவும் கூறப்படுகின்றது. மகாசிரேஷ்டமான பண்டிதர்களும் கூட "பகவான் கீதையில் இவ்வாறு சொல்லுகின்றார்" என்பதாக கீதா வாசகங்களை மேற்கோளாக எடுத்துக்கூறுவது நமது நாட்டில் வெகு சகஜமாயிருக்கின்றது. இந்து மதத்தின் எண்ணற்ற கட்டுப் பாடுகளில் மூழ்கிக் கிடக்கும் பாமர ஜன சமூகம், கீதை பகவானால் இயற்றப்பட்டதென்றும், அதன் உள்ளுறை யாவும் தெய்வவாக்கு என்றும், நம்பி வருவதுடன் அதன் வழி பற்றி நடப்பதுவே மக்கள் உய்வதற்குத் தகுந்த மார்க்கம் என்றும் எண்ணி வருகின்றனர்.

இவை யொருபுறமிருக்க, அந்த கீதையிலும், அதையருளியவர் ஸ்ரீ கிருஷ்ணபகவான் என்றும் விஷ்ணுபகவான் என்றும், விஷ்ணு பகவான் அந்த அவதாரரூபமாக வந்துகீதையைஉபதேசித்தருளினார் என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அதனாலேயே அதற்கு மகத்தான பெருமையும், தெய்வீக சம்பந்தமும் ஏற்பட்டிருக்கின்றது என்பதும் தெளிவாகின்றது. இதைப்போன்ற இந்துக்களின் சாஸ்திரங்கள் பலவற்றுள்ளும் கடவுள் சம்பந்தம் புகுத்தப்பட்டிருப்பது கண்கூடு. மதக்கட்டுப்பாடுகளுக்கு கடவுள்களும், கடவுள்களுக்குச் சாஸ்திரங்களும் ஆதாரமாக ஏற்பட்டுள்ளன என்பது ஆராய்ச்சி அறிவுள்ளவர்களின் துணிபு. எனவே இந்துமதசாஸ்திரங்கள் பலவற்றிலும் சிறப்பாக கீதையிலும் கடவுள் சம்பந்தம் புகுத்தப்பட்டிருப்பதிலும் அதனால் ஏற்பட்ட நம்பிக்கையினால், ஜனங்கள் 'சாஸ்திரங்களை' கடவுள்பயத்தால் ஒப்புக்கொண்டு அதன் வழிபற்றி நடப்பதிலும்ஆச்சரியமொன்றுமில்லை.

பொதுவாக, உலகமக்களின் இன்பவாழ்க்கைக்குஊறு விளைக்கக்கூடியனவாகப் பலபல இருப்பினும், மதக்கட்டுப் பாடுகளும் அவற்றினாலெழுந்த மூடநம்பிக்கைகளுமே முக்கியமானவைகளாக இருக்கின்றன என்பது மிகையாகாது. மதக்கட்டுப்பாடுகளை வலியுறுத்த கடவுள்பெயரால் பலசாஸ்திரங்களும் ஏற்படுத்தப்பட்டதினால், பாமர ஜனங்களை மதத்தத்துவங்களின் மூட நம்பிக்கைகள் வெகு இலகுவில் பற்றிக்கொள்ளுகின்றன. அதனாலேயே ஜனசமூகத்தில் உயர்வுதாழ்வு முதலான பேதங்களும், ஒருவர் மற்றொருவரை வஞ்சித்து தாழ்மைப் படுத்துவது போன்ற அக்கிரமங்களும் நிகழ்கின்றன.

இத்துன்பங்களையொழித்துநாட்டின் சமூக வாழ்வை இன்பகரமானதாகச் செய்ய வேண்டுமானால், நம்மிடையே நிலைத்துப் போன மத நம்பிக்கையாலுண்டான மூட நம்பிக்கைகளையும், அம்மூட நம்பிக்கைகளால் எழுந்த கண்மூடி வழக்கங்களையும் ஒழித்து விடவேண்டும். அவ்வாறு செய்வதற்கு நாம் இதுகாறும் கண்மூடித்தனமாய் நம்பி வந்த சாஸ்திரம் முதலியவைகளை தக்கவாறு ஆராய்ந்து நடுநிலைமையில் இருந்து நமது பகுத்தறிவு கொண்டு அதில் கூறப்படும் மதக் கட்டுப்பாடுகளின் சீர்கேட்டையும் பொய்க்கூற்றுகளையும் அசம்பாவிதங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டால் தான் முடியும். அதிலும் எல்லா சாஸ்திரங்களையும் விட உயர்ந்த தத்துவ நூல் என்பதாகக் கருதப்படும் கீதையை நாம் ஆராய்ந்துணர வேண்டியது மிகவும் முக்கியம் என்போம். ஏனெனில் இந்துக்கள் என்று கூறப்படும் நாம் நம்பும் பலவகைச் சாஸ்திரங்களையும் விட இந்த கீதைநேராகக் கடவுளுடையவாக்கிலிருந்து வந்ததாகக் கருதப்படுகின்றபடியால் இதை நாம் சரிவர ஆராய்ந்துஉண்மையைக் கண்டறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நமது நாட்டில் தெய்வத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் நிகழ்த்தப்படும் கொடுமைகளால் நமது ஜன சமூகம் சுயமரியாதை இழந்து நிற்கும் நிலைமையில், மதப்புரட்டுகளையும் அதனால் தோன்றிய கடவுள் புரட்டு, சாஸ்திரப் புரட்டு, போன்ற பலவற்றையும் ஒழித்து மக்களின் தன்மதிப்பைக்காப்பாற்றப் பெருங் கிளர்ச்சி தோன்றியுள்ள இக்காலத்தில், கீதையின்தத்துவத்தை ஆராய்ச்சி செய்ய முற்படுவதில் யாரும் அதிசயப்படமுடியாது. அன்றியும் மனித சமூகத்தின் அஞ்ஞானமாகிய இருளை, பகுத்தறிவினால்-ஆராய்ந்து வெளியாக்கப் பெறும் உண்மை விளக்கமாகிய ஞானோதயத்தினால், தவிர்ப்பதின் மூலமே ஜன சமூகத்திற்கும் அதையடுத்து நாட்டுக்கும் வாழ்வும் விடுதலையும் ஏற்படும் என்றும் நாம் நம்புவதால், நாமும் ஆராய்ச்சித்துறையி லீடுபட்டு தெய்வீக நூல் என்று எண்ணப்படும் கீதையின் தத்துவங்களைப்பற்றி ஆராய்ந்து இவ்வாராய்ச்சிக்குறிப்புகளைதொடர்ச்சியாக வெளியிடவே உத்தேசித்துள்ளோம். ஆதலால் நேயர்கள் இவற்றை கவனமாக வாசித்து வாசித்தவற்றையும் தங்களது அறிவால் சிந்தித்துப் பிறகு அதன் உண்மையையுணர்ந்து கொள்ள வேண்டு என்பதே நமது விருப்பம். நமது இந்தஆராய்ச்சி, அவ்வாறு சரிவர உணரப்பட்டு, அதன் பயனாக கீதையினால் நிலைத்துப் போன சில குருட்டு நம்பிக்கைகள் ஒழிக்கப்படுமானால், அதுவே நமது சிறு முயற்சிக்கு கைம்மாறாகயிருக்கும். சுயமரியாதை யுணர்ச்சி அரும்பியுள்ள இந்நாளில் நமது நாட்டுச் சகோதரர்கள்-தங்கள் பகுத்தறிவுக்கும் சற்று வேலை கொடுத்து நமது ஆராய்ச்சியின் துணையினால் கீதைஎவ்வாறு சில மூட எண்ணங்களுக்கு இடம் கொடுத்திருக்கிற தென்பதை உணர்வார்கள் என்றே நாமும் நம்பி இம் முயற்சியில் தலையிட்டுள்ளோம். நமது கருத்துக்களை வாசகர்கள் பக்ஷபாதமற்ற மனதுடன் கவனிக்க வேண்டும் என்று மறுபடியும் நாம் குறிப்பாய் வேண்டிக் கொள்வதுடன், இந்த ஆராய்ச்சி எவ்வித துவேஷ எண்ணத்தைக் கொண்டும் எழுதப்படுவதல்ல என்றும் வணக்கமாய் அறிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். கீதையின் கருத்துக்களை நாம் ஆராய்ந்து செல்லும் பொழுது அவற்றுள் நியாயமாய்ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகயிருப்பதை பாராட்டி ஏற்றுக்கொள்வதுடன் தள்ளக்கூடியனவாக யிருப்பதைத் தக்க காரணங்களோடு மறுத்தும் எழுதிப்போக எண்ணியுள்ளோமே யல்லாமல் அடியோடுமறுப்பதற்கு என்று இவ்வாராய்ச்சித் துறையில் இறங்கவில்லை. ஆதலால்இம்முறையில் வரும் நமது ஆராய்ச்சியினால் மனம்வெகுளாமல்பழய எண்ணங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு நடு நிலைமையில் இருந்து கருத்தைச் செலுத்துமாறு நண்பர்களை மேலும்மேலும் விரும்பிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## ஓர் பெரியாரின் மரணம்.

இஞ்சினீரிங் ஆபீஸ் சீப் அக்கவுண்டெண்டாக எம். எஸ். எம். ரயில்வேயில் 37 வருடம் உழைத்து, சுமார் நாலு வருஷங்களுக்கு முன் அதிலிருந்து விலகி, தரும சீலராய் விளங்கி, ஜனங்களாலும் அரசாலும் நன்கு மதிக்கப்பட்டு, அதன் பயனாய் ராவ் சாஹிப் என்ற பட்டமும் பெற்ற வி. ஷண்முகம் நாயகர் தமது 63 ஆம் வயதில் ராயபுரத்தில் தமது இல்லத்தில் 22-12-28ல் காலகதியடைந்துவிட்டார் எனக்கேட்டு மிக வருந்துவதுடன், அன்னவருடைய குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## திருப்பூர் டி. மு. கோர்ட்.

O. S. 1287 of 1928.

வெ. ஆஜீசம்சுதீன் சாயபு—வாதி

பெ. வெள்ளையண்ண ராவுத்தர் etc பிரதிவாதிகள்.

பகிரங்க விளம்பரம்.

திருப்பூரில் V. S. P. வெள்ளையண்ண ராவுத்தர் & Co, என்று நடந்து வந்த கூட்டு கம்பெனியானது நின்று போய், கூட்டைப் பிரித்து கம்பெனியை முடிவாக்கி குளோஸ் செய்யவேணுமாய் கூட்டாளிகட்குள் ஷை நம்பரில் தாவா ஏற்பட்டு ஷை கம்பெனியின் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் நடத்த நம்மை ரிசீவராக நியமித்திருப்பதால் ஷை கம்பெனிக்குப் பாக்கியுள்ளவர்கள் தாங்கள் செலுத்தவேண்டியபாக்கிகளை வட்டியுடன் நம்மிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டியது. கூட்டாளிகள் யாரிடமும் செலுத்தக்கூடாது. செலுத்தினதாகச் சொன்னாலும் செல்லாது. கூட்டு கம்பெனி பேருக்கு தொகையாவது, சரக்காவது கொடுக்கவும் கூடாது.

திருப்பூர் 2—1—29. } T. R. சுந்தரம் பிள்ளை ரிசீவர்

4ம் பக்கத் தொடர்ச்சி.

அருமைக்குழந்தையை இன்னுமொருதரம் பார்க்கப் போகாமலிருப்போமா" என்று வெளியில் ஓடி வந்தனர். தசரதன் ஓட முடியாமல் கீழே விழுந்தான்.

இராமன் திரும்பிப்பார்த்து, தசரதனும் கோசலையும் பைத்தியம் பிடித்தவர்களைப்போல தள்ளாடிக்கொண்டு தன்னைப் பின் தொடர்ந்து வருவதைக் கவனித்தான். உடனே தேரை விரைவாகச் செலுத்தச் சொன்னான். கோசலை கதறிக்கொண்டு ஓடிவருவதை இராமன் அடிக்கடி பார்த்தான். தசரதன் 'தேரை நிறுத்து' எனக் கட்டளையிட்டான். சுமந்திரனுக்கு இன்னது செய்வதெனத் தெரியவில்லை. இராமன் அதைப்பார்த்து "சுமந்திர! நான் கூறுமாறு தேரை விரைவாக ஓட்டும். பிறகு அரசரைப் பார்க்கும்போது "உங்கள் வார்த்தை காதில் விழவில்லை" என்று சொல்லும். அது பொய்யல்லவா என்றால், இந்தத் துக்கத்தை என்னால் பொறுக்கமுடியாது" என்றான். அந்தப்புரத்தாரும் நகரத்தாரும் இராமனை வலம்வந்து திரும்பினார்கள். தேரைச் சுமந்திரன் விரைவாகச் செலுத்தினான். மந்திரிகள் "க்ஷேமமாக திரும்பிவரவேண்டுமென்று நாம் விரும்புகிறவனை வெகுதூரம் பின் தொடரலாகாது' என்று தசரதனிடம் கூறினர். அவன் அதன்படி உடல் தளர்ந்து இராமனைப் பார்த்தபடியே தன் மனைவிகளுடன் நின்று கொண்டிருந்தான். பெண்களெல்லாம் 'இராமனைத் துரத்திய நமது அரசர் எவ்வளவு அறிவில்லாதவர்' என்று புலம்பினார்கள்.

இராமனைக் கண்டிப்பாகக் கோசலை தடுக்காததால் தாய்மாரை பிள்ளைகள் வெறுத்தனர். கோசலை சொல்லை இராமன் தட்டிச் சென்றதால் தாய்கள் பிள்ளைகளை வெறுத்தனர். கைகேசியைப் பார்த்துக் கோசலை போன்ற பெண்கள் தம் கணவரை வெறுத்தனர். பரதனைப்பார்த்து உடன் பிறந்தோர் தம்முள் அன்பை மறந்தனர்.

தேரால் உண்டாகும் புழுதியடங்கும்வரை தசரதன் அவ்விடத்திலிருந்து தன் கண்களை எடுக்கவேயில்லை. புழுதி மறைந்ததும் அவன் அங்கேயே கீழேவிழுந்தான். கோசலை வலதுபுறத்தில் நின்று அவனைத் தூக்கினாள் கைகேசி இடதுபுறத்தில் வாளா நின்றாள். அப்போது தசரதன் கைகேசியைப்பார்த்து "அடி பாதகி! நீ என்னைத்தொடாதே, என்முன் நில்லாதே, நீ எனக்கு மனைவியில்லை. பரதன் இந்த அரசைப்பெற்றுமகிழ்ந்தால் அந்த மகாபாவி எனக்குச்செய்யும் உத்தரக் கிரியைகள் என்னைச்சேரவேண்டாம்" என்று கோபத்துடன் கூறினான். பின் கோசலை அவனுடைய புழுதிபடிந்த உடலைத் தூக்கி எடுத்து மெல்லமெல்ல அரண்மனைக்கு அழைத்துப்போனாள். போகும்போது மன்னன் தேர்ச்சுவடுகளை அடிக்கடி திரும்பித்திரும்பி உற்றுப்பார்த்துக்கொண்டே "நல்ல சந்தனங்களால் அலங்கரிக்கப்பட்ட உடலுடன் சுகமான தலையணைகளின்மேல் சாய்ந்துகொண்டு அழகுவாய்ந்த வேலைக்காரிகள்விசிறிபோடத் தூங்கிய இராமன் இன்றிரவு எந்தக்கட்டிலில் படுப்பான்? இராமனில்லாமல் ஒரு நொடியாவது என்னால் பிழைக்கமுடியாது" என்று புலம்பிக்கொண்டு தன் மனைவியருடன் பிணத்தை கொளுத்திவிட்டு நீராடி வீட்டுக்குத்திரும்பி வருகிறவர்களைப்போல நகரத்திற் புகுந்தான். அரண்மனையையடைந்த தசரதன் "இராமன் தாயான கோசலையின் வீட்டிற்கு என்னைச் சீக்கிரத்தில் கொண்டுபோய் விடுங்கள். அதைத்தவிர வேறிடத்திலிருந்தால் என்துக்கம் தணியாது" என்றான். உடனே வழிகாட்டுகிறவர்கள் அவனை அங்கே அழைத்துப்போய் காவலிருந்தனர். அங்கேபோய்க்கட்டிலில் படுத்துக்கொண்ட பின்னரும், அவன்புலம்பினான். இரவில் தசரதன் கோசலையைப்பார்த்து "எனக்குக் கண்ணொளி அற்றது. நீ இருக்குமிடம் தென்றாகத்தெரியவில்லை. உன்கையில் என்னை நன்றாகத் தொடு. இராமனுடன் காட்டிற்குப்போனகண்கள் இன்னும் திரும்பிவரவில்லை. அவனைப்பார்க்கப் போனவை திரும்பிவருமா? அவனைப்பார்க்கும் நல்வினை எனக்கில்லாமற் போனதும் அவனைப்பெற்ற உன்னைப்பார்க்கவும் என் கண்களால் முடியவில்லை. அதனால் என் கண்கள் போயின. இராமனைப்பார்க்காமல் தவிக்கும் எனக்கு அவனைப் பெற்ற உன்னைத்தொட்டால் அந்தத்தாபம் நீங்கும். இராமனைப் பார்க்காவிட்டாலும் அவனுடைய தாயான உன்னைப்பார்த்துப்பேசித் தொடுவதால் அதற்குச் சமமான சுகம்கிடைக்கும். இராமனுக்கு அறியாத்தனத்தால் ஏதோ தீமைசெய்து விட்டேனென்று என்னை மன்னித்துக் கைகளால் அன்புடன் தொடு" என்று புலம்பினான்.

கோசலையோ "இராமனைக்கெடுத்த கைகேசி இனிமேல் என்னைவருத்த ஆரம்பிப்பாள். பரதன் நாடாள வேண்டுமானால் இராமன் காடேகவேண்டுமா? பரதனுக்கு அவனால் கெடுதிநேருமல்லவா என்றால், இராமனை பரதனுக்கு அடிமையாயிருக்கும்படி செய்கிறேன். பரதன் அடிமையாகிய இராமனுக்கு உணவுகொடுக்கும் சிரமமுமில்லாமல் இவ்வூரில் வீடுவீடாகப்பிச்சையெடுத்துப் பிழைக்கும்படி சொல்லுகிறேன் இராமனைத்திரும்பப் பார்ப்பேனா? இருபத்தைந்து வயதுள்ளவனாகிய இராமன் எப்போது திரும்பிவருவான்? என்று கதறினாள்.

சுமத்திரை அவளைநோக்கி "அம்மா! வருந்தாதே. இராமன் திரும்பி வருவதற்குள் பரதனுடைய அதிகாரம் பலப்பட்டுவிடுமே. அப்போது இராமனுக்கு நாடு கிடைக்காதே, என்ன செய்கிறதென்றால், இராமனுடைய அம்புக்குமுன் யார்தான் நிற்பார்? அப்படிப்பட்டவனுக்கு இந்த பூமியை அடைவது ஒரு பொருட்டா? இராமன்காட்டிலிருந்து திரும்பிவந்து ஒரு நொடியில் இந்நாட்டைக் கைப்பற்றிக்கொள்வான். இராமன் முடிசூடுவதை உன்கண் குளிரக்காண்பாய், கவலைப்படாதே" என்று தேற்றினாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமனை தசரதன் தன்னைவிலக்கி அரசாளுமாறு தூண்டுகிறான், முன்னரும் "இராமன் என் சொற்படி கேளாமல் முடிசூடிக்கொள்வானேல் அது எனக்கு மிகவும் விருப்பமான செயலாகும்" என்கிறான். இதெல்லாம் தசரதனுடைய இழிகுணத்தையே காட்டும்.

சுமந்திரன் அரசனுக்கு கைகேசியிடத்தில் பற்றுதல் ஒழிந்தது என்பதைத் தெரிந்துகொண்டு தகாத முறையிற் கண்டித்துப்பேசுகிறான். இது அவனுடைய தாழ்ந்தகுணத்தையே உணர்த்தும். இந்த அரசன் முதலியோருங்கேட்டிருப்பது மிகவும் விந்தையே! தசரதனும் வசிட்டனும் பலவிதமாக வாயடி அடித்தாவது கேகேசியின் புத்தியைக்கலக்கித் தங்கள் எண்ணத்தைச் சாதிக்கலாமெனநினைத்து "களஞ்சியங்களும் சேனைகளும் இராமனுடன் போகட்டும். இல்லையேல் நாங்களும் அவனுடன் போவோம்" என்கின்றனர். கைகேசி இதற்கு இடங்கொடாதபோது தசரதன் "நீ அரசை கேட்டாயே ஒழிய களஞ்சியங்களையும்சேனைகளையும் சேர்த்துக் கேட்டனையா" என்று கடாவுகிறான். இவ்விடத்துமொழிபெயர்ப்பாளராகிய திரு. சீனிவாசய்யங்கார் குறிக்கும் குறிப்பு கவனிக்கத்தக்கது. அதுவருமாறு:—"ராஜ்யமென்றால் அதின் சகல அங்கங்களும் கூடினதென்றதை தசரதர் அறியாதவர்போல் வாயடி அடிப்பது ஆச்சரியமே"

இதற்கும்கேவலமாக அறிவில்லாதவனாகிய வசிட்டன் நடந்துகொள்கிறான் அவன் "இராமன்வேண்டுமானால் காட்டுக்குப்போகட்டும் அவன் மனைவி சீதை அரசாளட்டும்" என்கிறான். இவ்விடத்தும் மொழிபெயர்ப்பாளர் ஐயங்காரது குறிப்பு கவனிக்கத்தக்கது. அதுவருமாறு:—"ராஜ்யத்தைப் பரதனே ஆளவேண்டுமென்பதே கைகேசிபெற்ற வரமென்பதை இவர்என் மறந்தார்?"

தசரதன் கைகேசியை மணக்குமுன் செய்துகொடுத்த சத்தியத்தை அறிந்த சுமந்திரன், வசிட்டன் முதலியோர் அரசனைத்தடுக்காதிருந்ததோடு தெய்வாதீனமாக வேறுவிதத்தில் தற்செயலாய் உண்மையறியாது நாட்டைப்பெற முனைந்துநின்ற கைகேசியைக் கண்டித்தது அவர்களுடைய அற்பகுணத்தையேகாட்டும். இவ்வசிட்டனை மிகச்சிறந்த முனிவனென்கின்றனரே! உண்மைஉண்மை! அயோக்கியத் தனத்திலும் பொய்மையுடைமையிலும் இவ்வசிட்டன் மிகச் சிறந்தவனே. இனியாவது உலகம் இவ்வசிட்டனை முழு அயோக்கியனென்றுணருமா? இவ்விடத்து அதாவது அயோத்தியா காண்டம் முப்பத்தேழாம் சருக்க ஈற்றில் (பக்கம் 163) மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பி, ஏ, குறித்துள்ள செய்தி மிகவும் ஊன்றி கவனிக்கத்தக்கது. இதனை நண்பர்களனைவரும் கவனித்துப்படித்து உண்மையறிவார்களாக. அக்கூற்று வருமாறு:—"கைகேயியை விவாகஞ் செய்தபொழுது அவளுக்குப்பிறக்கும் புத்திரனுக்கே ராஜ்யம் கிடைக்கவேண்டுமென்று அவளுடைய பிதா தசரதனிடத்தில் உறுதி வாங்கிக்கொண்டிருக்கிறார். இது ராமனுக்கும், வசிஷ்டருக்கும், சுமந்திரர் சித்தார்த்தர் முதலிய மந்திரிகளுக்கும் தெரிந்த விஷயமே. இது முதலாவது பாத்தியம். ராஜா வரங்களை கொடுத்தது இரண்டாவதுபாத்தியம். எதைக்கேட்டாலும் கொடுப்பதாய் ராஜா மறுபடியும் பிரமாணஞ்செய்தது மூன்றாவதுபாத்தியம். ராமனும் அப்படியே செய்தது நான்காவது பாத்தியம். ஆகையால் ராமனுக்கு அபிஷேகஞ்செய்ய அரசன் ஏற்பாடு செய்ததும், ராமன் வசிஷ்டர், மந்திரிகள், அதைத்தடுக்காததும் எல்லோரும் கைகேயியைத் தூஷிப்பதும் ஆச்சரியமே!"

தசரதன் கைகேசி வயிற்றுப் பிள்ளைக்கே பட்டத்தைத் தருவதாகச் சத்தியஞ்செய்துகொடுத்த செய்தி இராமாயணத்திலேயே இராமன் வாயிலிருந்துதான் அறிய இருக்கிறது. பரதன் இராமனை அழைக்கச் சித்திரகூடம் சென்றபோது அங்கே பரதனைநோக்கி இராமன் இந்தச் செய்தியை விவரமாகக் கூறுகிறான் (அயோத்தியாகாண்டம்-சருக்கம் 107.) இதனால் இராமனும் இச்செய்தியை அறிந்துகொண்டுதான் அவர் மயக்குற்ற தசரதனுடைய சூழ்ச்சிகளுக்கு உடந்தையாயிருக்கிறான், வசிட்டன் சுமந்திரன் முதலிய பஞ்சமாபாதகர்களும் இதற்கு உடந்தையாயிருக்கிறதோடு நில்லாமல் கைகேசியையும் பலவாறு தூற்றுகின்றனர். ஆனால் அவள் எசற்றும் இடங்கொடுக்கவில்லை.

சித்தார்த்தன் என்ற பிரதானி கூற்றில், சகரனென்ற ஆரியமன்னன் தனது மகனாகிய அசமஞ்சனென்பான் ஊர்ப்பிள்ளைகளைத் தூக்கித்தண்ணீரில்போட்டு அவர்கள் முக்கிமுக்கிச்சாவதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டு கொன்றகொலைபாதகங்களுக்குத் தண்டனையாக அவனை நாடுகடத்தினன் எனத் தெரிகிறது. இத்தகைய கொலைபாதகனாகிய அசமஞ்சனுக்கு நாடுகடத்தலே ஒரு தண்டனையா? தன்மகன் செய்த பாதகத்துக்கு இவ்வாறு தண்டனை விதித்தவனுக்கு வேறுவிதமான தண்டனை விதிக்கும் அரசர்கள்பலர்வேண்டும்! அவ்விதமான வழியில் பிறந்த தசரதன் மகனாகிய பரதனை வஞ்சித்து மற்றொரு மகனாகிய இராமனுக்கு நாட்டைக்கொடுக்கமுற்பட்டது ஆச்சரியமல்ல!

இராமன் மிகவும் பேராசையுடையவன். ஆனால் தன் தீய எண்ணத்தைப் பிறர் அறியாதவாறு அடக்குகொள்ளக்கூடிய நுண்ணறிவுடையவனென்பதை முன் பல இடங்களில் விவரித்தெழுதினோம். அதனால் தசரதனே தன் அரசைப் பிடுங்கி

# ஓர் சீர்திருத்தமடைந்த திருமணம்

8—12—28ல் சென்னை பிர்ம சமாஜத்தில் வைத்திய மாணவர்கள் திரு. சி. வ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் திரு. மு. சித்தாலக்ஷிமி அம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் இருவரும், மனிதர் யாவரும் சரிசமானமானவர்களே யன்றி அவர்களில் ஜாதி பேதமோ உயர்வு தாழ்வோ இல்லை என்பதறிந்து உலகிலுள்ள அனைவரையும் சகோதரர்போல் எண்ணி ஒழுகுபவர்கள். திருமண மண்டபத்தில் ஆண் மக்களும் பெண் மக்களுமாக சுமார் 400 பேர்களுக்குமேல் குழுமி இருந்தார்கள். அக்கூட்டத்தில் சர். வ. பி. பாத்ரோ, திவான் பகதூர் வரதராஜுலு நாயுடு, திவான்பகதூர் ஜே. வெங்கட்ட நாராயணா, திரு. சுந்தரராவ் நாயுடு, மிஸ்ஸஸ் என், ஹெச், போஸ். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை, திரு வி, பி. ராஜ் பி. எ, டாக்டர் அகல்யாபாய், விமலா சுலோச்சனா, நித்யானந்தா, மணி. திருநாவுக்கரசு முதலியார் முதலியவர்களும் இன்னும் அநேக பெரியோர்களும் காணப்பட்டார்கள்.

மண மக்களிருவரும் பூமாலைகளணிந்து கம்பளம் விரிக்கப்பட்ட மேஜையின் மேல் அமர்ந்திருந்தனர், அவர்களுக்கு மத்தியில் பூமாலைகளும் பழங்களும் பன்னீர் சந்தனம் முதலியவைகளும் வைக்கப்பட்ட ஓர் தாம்பாளமிருந்தது. இக்கல்யாணத்தை நடத்திவைக்கும் திரு. வி, பி. ராஜ் அவர்கள் மணமக்களுக்கெதிரில் ஓர் நாற்காலியில் அமர்ந்தார். அதுவரையில் வாசித்துக்கொண்டிருந்த வாத்தியம் நிறுத்தப்பட்டு ஹார்மோனியத்தோடு ஒருவர், குடும்ப வாழ்க்கையைப் பற்றிய நற்போதனையைப் புகட்டும்படியான சிலபாடல்களை இன்ப சுரத்துடன் பாடினார். பின்னர் கல்யாணத்தை நடத்தி வைப்பவரான திரு. வி. பி. ராஜ் அவர்கள் சுமார் முக்கால் மணி நேரம் போல் மணமக்களுக்கு மணம் என்பதைப்பற்றியும் ஒருவரோடொருவர் தங்கள் சுற்றத்தாருடனும் ஜன சமூகத்திலும் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்றும் அவர்களின் கடமை இன்னதென்றும் சகலருமறியப் பேசினார். மணமக்களாலும் வந்திருந்த எல்லோராலும் நிசப்தமாயிருந்து இது கவனிக்கப்பட்டது. பிறகு மணமகன் பெண்ணைத் தன் மனைவியாகக் கொள்வதாயும் வாழ்விலும் தாழ்விலும் நீங்கா அன்புடன் எக்காலத்திலும் உடனிருந்து வாழ்வதாகவும் பலரும் அறிய உறுதிமொழி எடுத்துக்கொண்டார். அதே மாதிரியாக பெண்ணும் எடுத்துக்கொண்டார். பிறகு திரு, ராஜ் அவர்கள் மணமக்களுக்கு ஆளுக்கொரு ரோஜா மாலைகளைக் கொடுத்து ஒருவருக்கொருவர் மாற்றிப்போட்டுகொள்ளச் செய்தார்.

பிறகு பூ, பழம், சந்தனம், பன்னீர், வெற்றிலைப்பாக்கு முதலியன வழங்கப்பட்டு முடிவில் மண மகனுடன் பயிலும் மாணவர்களாலும் மற்றுமுள்ள பெரியோர்களாலும் சில வாழ்த்துப்பாக்கள் பாடப்பட்டும் சொற்பொழிவுகள் பொழியப்பட்டும் பெரிய ஆரவாரத்தோடு சந்தோஷமாய் முடிவு பெற்றது.

பின்பு ஓர் சமபந்தி போஜனம் நடைபெற்றது, பரந்த நோக்கமுடைய அனைவரும் இதைப்பின் பற்றுவது நம் நாட்டின் அதிர்ஷ்டமேயாகும்.

பொதுவாக பிராமணர்களை நீக்கினாலும் அவர்கள் காட்டிய குருட்டு வழக்கங்களை ஒழிக்காமலிருப்பதில் பயனில்லை. இம்மணம் ஆயிரக்கணக்கான பணச்செலவன்றியும் காரணமற்ற சடங்குகளற்றும் உண்மை கல்யாணமாக விருந்தது. மணமக்களுக்கும் வந்திருந்த பெரும் பாலோருக்கும் தெரிந்திருந்த பொது பாஷையாகிய ஆங்கிலபாஷையில் இம்மணம் நடைபெற்றது.

## வட ஆற்காடு ஜில்லா கூட்டுறவு பத்தாவது பெருங்கழகம்.

இந்த ஜில்லா கூட்டுறவு பத்தாவது பெருங்கழகம் 1929 ஹு ஜனவரி மாதம் 5, 6 தேதி சனி, ஞாயிறு கிழமைகளில் வேலூர் உயர்தர பாடசாலையில் நடைபெறும்.

அதுசமயம பெருமை தங்கிய நமது சென்னை சுகாதாரப்பிரிவு அமைச்சர் திருவாளர் S. முத்தையா முதலியார் அவர்கள் B. A. B. L. கைத்தொழில், விவசாயப் பொருட் காட்சிகளைத் திறந்து வைப்பார். பெருமை தங்கிய நமது வளர்ச்சிப்பிரிவு அமைச்சர் திருவாளர் M. R. சேதுரத்தினம் அய்யர் அவர்கள் பெருங்கழகத்தைத் திறந்து வைப்பார்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவரும் சென்னை சட்டசபை அங்கத்தினருமான திருவாளர் W. P. A. சௌந்தரிய பாண்டிய நாடார் அவர்கள் M. L. C. பெருங்கழகத்திற்கு தலைமை வகிப்பார்.

ராவ்பகதூர் வே முருகேச முதலியார்.
உபசாரணைச்சபைத் தலைவர்.

---

க்கோன் என்று தூண்டினும் அந்நன்மையபவாத சொற்களுக்கெல்லாம் இராமன் இணங்கவில்லை. இராமனுக்கு உண்மையில் கைகேசி இடத்திலே மிகவும் கெட்ட எண்ணம். ஆனால் வெளிக்கு அவளிடம் மிகவும் அன்புள்ளவன்போல பாசாங்கு செய்திருக்கிறான். இவன் இலக்குவனை உடனழைத்தேக மறுத்தபோது (சருக்கம் 30) "நீயும் காட்டுக்கு வந்துவிட்டால் கோசலையைப்பாதுகாக்க யாருளர்? அரசனோ மன்மத பாசங்களால் கட்டப்பட்டு பிறருடைய மனப்படி நடக்கிறார், கைகேசியும் நமது தாய்களுக்கு நன்மையைச் செய்யவே மாட்டாள் பரதனோ கைகேசிக்கு உட்பட்டவனாதலின் அவள் செய்யும் தீமைகளைத்தடுக்க முடியாது. மேலும் அவன் கோசலையை நினைக்கவே மாட்டான்" என்று கூறியிருக்கிறான். இதனால் கைகேசியைப்பற்றி மிகவும் கெட்ட எண்ணத்தை இலக்குவனுக்கு உண்டுபண்ணுகிறான். மேலும் தசரதனிடம் விடைபெறும்போது "தந்தையே! எனது தாயை அவளுடைய பகைவர்வசம் காட்டிக்கொடுத்துவிடக் கூடாது" என்று தசரதனைக் கண்டித்து வேண்டுகிறான், மற்றும்தனது தாய் கோசலையை தன்னுடன் வரத்தடுக்கும்போது (சருக்கம் 24) "நாங்களும கைகேசியால் வஞ்சிக்கப்பட்ட என்பிதாவைக் கைவிட்டால் அவர்பிழைக்க மாட்டாரென்பது நிச்சயம்" என்று கூறியிருக்கிறான்.

இராமன் பொய்யனென்பது மேலேகண்டவாவாற்றால் தெரியவருகிறது. அவன் சுமந்திரனைப் பொய் புகலுமாறு தூண்டுகிறான். இவ்வாறு இராமன் பலவிதத்திலும் தீயனாகவே இருந்திருக்கிறான் என்பது தெரிய வருகிறது. தனது சகோதரனாகிய பரதனை வஞ்சிக்க முன்னின்றானெனின் இதைவிடக்கொடியபாதகம் வேறுயாது உளது? இத்தகைய இராமனையேயாரியனைத்தமது தெய்வமெனத் தமிழ்மக்களிற் சிலர் ஏமாந்து நினைத்து நம்புவது அந்தோ!

---

3ம் பக்கத் தொடர்ச்சி.

கும் பாப்பார்களுக்கும் அன்ன தானத்துக்கும் மற்றெல்லா தான தருமங்களுக்கும் செலவுசெய்வதன் மூலமாகத்தான் சுவர்க்கமும் கடவுளின் கிருபையும் பிதிர்லோக பாக்கியமும் அடையமுடியுமென்று சொல்லும் சாஸ்திரங்களையும் அதைப் பரப்பும் சாஸ்திரிகளையும் அதற்கு வழி விட்டுக்கொண்டிருக்கும் மற்ற பாப்பார்களையுமே குற்றம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில் "உத்தம பிராமணனல்லாதவனுக்கு தானம் கொடுத்தவன் நரகத்திற்கு போவதுமல்லாமல் தன் உயர்வும் கெட்டு தன் குடும்பமும் நாசமாகும்" என்று கலியுகத்திற்கு தருமப் பிரமாணமான பராசர ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே பிராமணன் என்று அவன் சொல்லிக்கொள்ளும் யோக்யதை ஒன்று தவிர பிராமணத்தன்மைக்கு ஒரு சிறு யோக்யதைகூட இல்லாத பாப்பானுக்கு தானம் கொடுத்த அநேக குடும்பங்கள் கெட்டும் அழிந்தும் ஏழையாகியும் கடன் பட்டும் பேர் சொல்ல ஆளில்லாமல்கூட போய்விட்டன. தஞ்சாவூர் ராஜாவைவிட கோவில் கட்டினவர்களும் பாப்பானுக்கு தானதருமம் விட்டவர்களும் காசியிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் சத்திரம் கட்டினவர்களும் உண்டா? இப்பொழுது அரண்மனையில் தோக்குருவியல்லவா குடியிருக்கிறது. வேத கோஷ்டிகள் கோஷித்த வேத மந்திரங்களை தோக்குருவிகள்கேட்கும்படியான பாக்கியத்தைத்தான் அரண்மனையடைந்தது. மைசூர் ராஜாவினிடமே சங்கராச்சாரியார் இருக்கிறார். ராஜாவுக்கு சந்ததியில்லை, நாகர் பிரதிஷ்டை செய்யும் பாப்பார மந்திரம் அவருக்கு ஏன் பலிக்கவில்லை? வடக்கே பனிக்கட்டியே லிங்கமாய் பனியே உறைந்து கிடக்கும் அமரநாத் மலைக்கு அநேக தரம் யாத்திரை செய்பவர், பாப்பானுக்கு அள்ளிக்கொடுப்பதோ அளவில்லை. ராஜா சந்ததிக்குத் தம்பிக்குப் பிள்ளை இருக்கிறதென்பார்கள். ராஜா தம்பி பாப்பார மந்திரங்களுக்கு கட்டுப்படாமல் மேனாட்டு யாத்திரை செய்தவர். அவர் ராஜ்யம் பாப்பார மந்திரத்தால் பறந்துபோய் வெள்ளைக்கார நீதியால் அவருக்கு நிலைநாட்டிக் கொடுக்கப்பட்டதை நீங்களுமறிவீர்கள். இதை ஏன் எடுத்துக் காட்டுகிறேனென்றால் பாப்பானுக்கு தானமென்று கொடுப்பதினால் தீமையே ஒழிய நன்மை ஒன்றுமே இல்லையென்பதை காட்டுவதற்கே.

தஞ்சாவூர் ஜில்லா துவாரில் முதல்கூடிய பிராமண சபையில், பிராமணன் சூத்திரன் இரண்டு ஜாதிதான் இப்பொழுதிருக்கிறதென்று தீர்மானம் செய்ததை எல்லாப்பாப்பானும் நீங்களுமறிவீர்கள். தாங்கள் பிராமணர் என்றும் மற்றவர்களெல்லாம் சூத்திரர்களென்றும்தானே அவர்கள் தீர்மானமும் நினைவும். சூத்திரன் என்றால் தாசிமகன், அடிமை, மடையன், ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதைப் புசிப்போன் என்றுதானே ஸ்மிருதியிலும் இதிகாசத்திலுமெழுதப்பட்டிருக்கிறது. துவார் மகாநாட்டுத் தீர்மானத்திற்குப் பாப்பானும் அவனைத் தாங்கி நிற்கும் சூத்திரனும் என்ன சொல்லுகிறார்கள்?

தொடரும்.

Use Only Unbreakable Wrought Iron Railings Noted for.




100 வருஷத்துக்கு உத்திரவாதம்-
நம்நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள்.
இரும்பு கிராதிகள் விலை சரசம்.

பால்கனி கட்டிடங்களுக்கு அவசியமான இரும்பு கிராதிகள் அநேக தினுசுகளில் விற்பனைக்கு தயார்செய்திருக்கிறோம். இந்த புது தினுசு கிராதிகள் நாகரீகமானதும் கட்டிடங்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதும், எந்த விதத்திலும் உடையாததுமாக தயார்செய்து வாரானமாக விற்பனைசெய்துவருகிறோம். கட்டிடங்களுக்கு எற்றவாறு எந்த அளவுப்படியும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும். உடனே தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகளுக்கு ஆர்டர் செய்யவும்- பிரைஸ் லிஸ்ட் இனாம-
தயார் செய்பவர்கள்:—

ஸ்ரீ கிருஷ்ண இரும்பு தொழிற்சாலை,
மதுரை.

குளிர்! குளிர்!! குளிர்!!!

**பால கலவர் அல்லது கம்பளி குல்லா.**



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும்.

நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்.

கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்,

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



# ஜீவரசம்.

(ஓர் குடும்ப ஔஷதம்)

ஏன் வைத்தியரைத் தேடவேண்டும்!

சகல ரோக நிவாரணி உங்களிடமிருந்தால் வேறு வைத்தியர் தேவையில்லை. செலவும் குறையும்.

அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் உள.
ஒரு புட்டிக்கு உடனே எழுதுக.
உண்மை விளங்கும். விலை ரூ. 1-8-0

முக்கிய வியாபாரிகள்:—
T. N. சொக்கலிங்கம் பிள்ளை அன் சன்ஸ்,
வடக்கு சித்திர வீதி, மதுரை.

ஜீவரசம் கம்பெனி (லிமிடெட்,)
(2) காரைக்குடி S. I.

## பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் ஒழித்த நண்பர்கள்

1 ராமாநுஜலு நாயுடு
எம். எஸ். எம். ஆர், ஆஸ்பத்திரி
ஹரப்ளி.

2 வி. சிங்கார வேலக்கிராமணியார்
தர்மகர்த்தா
இளங்காடு, தஞ்சை.

3 செ. சிங்காரவேல்முதலியார்
புவனகிரி
சிதம்பரம் தாலூகா.

4 டி. எஸ். பாலசுந்தரம்
ஓவிய ஆசிரியர்
அரசாங்க கலாசாலை, கோவை.

5 வி. வேதாச்சாரி
பாலையூர்
மன்னார்குடி தாலூக்கா.

6 வி. எஸ். வி. சடகோப நாயுடு
மணிலெண்டர்,
தம்பின், மலேயாகாடு.

7 வீ. ராஜு நாயுடு
புத்தூர்
திருச்சினாப்பள்ளி.

8 குமாரசாமி,
கச்சேரி வீதி,
ஈரோடு

9 எம். அர்த்தநாரீஸ்வரர்,
ஈரோடு.

சுயமரியாதை பெறவேண்டுமானால்
"குடிஅரசு" "திராவிடன்"
பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு

**மன்மத ஸ்தம்பன குளிகை.**

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

# ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.
டெலிபோன் 3311-.
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

# தேவை.

தஞ்சாவூர் தாலூகா போர்டு ஆண்கள், பெண்கள், பாடசாலைகளுக்காக போதனாமுறை பயின்று தேறிய உபாத்தியாயர்களும், உபாத்தினிகளும், தேவை. 10—1—1929-க்கு மேல் அனுப்பப்படும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டா.

சம்பள விகிதம் கீழ்க்கண்டவாறு:—

| கிரேடு. | உபாத்தியாயர்கள். | உபாத்தினிகள். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| செகண்டரி கிரேடு ... | 30—1-A—35. | |
| எலிமெண்டரி ஹையர் கிரேடு ... | 20—½-A—25. | 25—1-A—30. |
| எலிமெண்டரி லோயர் கிரேடு ... | 15—½-A—20. | 20—1-A—2[illegible]. |

தஞ்சை தாலூகா போர்டு கச்சேரி, 20—டிசம்பர்—1928.

த. வே. உமாமகேசுவரம்.
தலைவர், தாலூகா போர்டு, தஞ்சாவூர்,


நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதவம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காகாப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப அவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார். திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I)



"ஏன் வீணாக அவஸ்தைப் படுகிறீர்கள்"

உடனே எழுதுங்கள்.

## அமிர்த சாரம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் குவிந்துவருகின்றன. மனிதனுக்கு ஏற்படும் எல்லா வியாதிகளையும் துளிக்கணக்கில் உபயோகிக்க, நிமிடக்கணக்கில் ஆச்சரியமாய் குணமடையலாம்.

ஒரு புட்டியின் விலை 2—0—0 கேட்டாக் இனம்.

REGISTERED TRADE MARK

Apply to— சங்காராம் மெடிகல்ஹால், குகை, சேலம். (S. I. R.)


## சந்தாதாரர்களுக்கு
## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறு வருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்தநம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


எதிர்பார்த்தது வந்து விட்டது!!

## தமிழ் டைப் மிஷின்கள்.

எழுத்துக்கள் சுத்தமாக இருக்கக்கூடியது எல்லாவித வேலைகளுக்கும் உதவக்கூடியது. ஒவ்வொரு ஆபீசுக்கும் தேவையானது. வியாபாரிகளுக்கு அவசியமானது. விபரத்திற்கு எழுதவும்.

ராம் நாராயணன் அண்ட் கம்பெனி,
147, அக்கிரார வீதி, ஈரோடு.



பட்டாதாரர்களே!

## இன்றே எழுதுங்கள்.

கிஸ்திகாலம் நெருங்கி விட்டது. நீங்கள் செலுத்தும் பணத்துக்குச் சரியான இரசீது புஸ்தகங்களை முன்னமே வரவழைத்துக்கொள்வது நலம்.
100-பக்கமுள்ள பைண்டுபுக் 1-க்கு 0—8—0.
சிறியபுக் 1-க்கு 0—0—9. 100-க்கு 3—0—0.
தபால் சார்ஜ் வேறு. பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்களும் கிடைக்கும்.

ஸ்ரீ ஷண்முகானந்தம் பிரஸ்,
பழனி.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

இனம்! இனம்!!




முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.


[illegible] ஈரோடு "உண்மை விளக்க" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.